கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
6-1-1974
40 காசு



நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப் போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.

தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும். கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது— உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.

அரைப்பங்கு செலவில் இருபங்கு ஒளி!

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?

அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்



கோகுலம்

மலர் 2 : இதழ் 20
ஜனவரி 6, 1974
பிரமாதீச, மார்கழி 22




அட்டையில் :

புத்தம் புதுமலர் பூத்தது
பூவண்டு மதுஉண்ண வந்தது

வண்ணப்படம் : வித்யாவ்ரதா

உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

— பாரதியார்



சந்தா விவரம் :

உள் நாடு :

ஒரு வருடம் ... ரூ. 10–00
ஆறு மாதம் ... ரூ. 5–00

இலங்கை :

ஆண்டுச் சந்தா : ரூ. 15–00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ: 25–00

★

மானேஜர், கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை - 600031

பிள்ளையார் பெருமை

புருசுண்டி


திருமகள் ஓங்கியுறையும் திருநகரம் நந்துரம். இந்நகரின் அருகில் ஒரு வேடச்சேரி இருந்தது. அச்சேரியில் விப்பிரதன் என்ற வேடன் இருந்தான். அவன் ஆலகால நஞ்சினுங் கொடியவன். வழிப்பறி செய்வதில் மிகவும் வல்லவன். வழிப்போக்கர்களை மடக்கி ஒடுக்கி அவர்களுடைய பொருள்களைப் பறித்துக் கொள்ளுவான்.

ஒரு நாள் ஓர் அந்தணன் அவ்வழியே வந்தான். வேடன் அவனைக் கண்டு நமக்கு இன்று நல்ல பொருள் கிடைக்கும் என்று கருதி அந்தணனைத் தொடர்ந்தான். அந்தணன் புலியைக் கண்ட ஆட்டுக் குட்டி போல் நடுங்கி ஓடினான். விப்பிரதன் விரைந்து அவனைத் தொடர்ந்து ஓடியும் அந்தணனைப் பிடிக்க முடியவில்லை. அதனால் மனம் வருந்தித் திரும்பினான். வழியில் விநாயகர் திருக்கோயிலும் தீர்த்தமும் இருந்தன. விப்பிரதன் களைப்பினால் அப் புனித தீர்த்தத்தில் முழுகினான். நீர் விடாயினால் அத் தீர்த்தத்தைப் பருகினான். அங்குள்ள மர நிழலில் தங்கியிருந்தான்.

தவத்திற் சிறந்த முற்கல முனிவர் அவ்வழியே வந்தார். வேடன் வாளை உருவி அவரை வெட்டுவதற்கு ஓங்கினான். முனிவர் பெருமான் அவனை உற்றுப் பார்த்தார். அவருடைய திருக் கண்ணோக்கால் அவன் வாளும் அறியாமையும் வீழ்ந்தன. பரம ஞானியின் பார்வையால் அவனை விட்டு அறியாமை அகன்றது. நல்லுணர்வு தோன்றியது.

வேடன் முற்கல முனிவருடைய பாத மலர் மீது வீழ்ந்தான். ''அடியேன் செய்த பாவங்கள் அளவற்றவை. உய்யும் வகையருளி என்னைக் காத்தருள்வீராக'' என்று கூறி அழுதான். பன்முறை தொழுதான். அவருடைய திருவடியை உடும்பு போல் இறுகப் பற்றிக் கொண்டான்.

அடைக்கலம் புகுந்தவரை ஆட்கொள்வது ஆன்றோர் கடன். முற்கல முனிவர் அவன் மீது கருணை கொண்டார். அவனை நீராடி வரச் செய்து அவன் தலையில் தமது திருக்கரத்தை வைத்து, ''ஓம் கணேசாய நம'' என்ற திருமந்திரத்தை உபதேசித்தார். ஓர் உலர்ந்த தடியை அங்கு நட்டார். ''அன்பனே! இத்தடிக்கு நாள்தோறும் காலந் தவறாமல் நீர் ஊற்றுவாயாக. விநாயகரைத் தியானித்து இம் மந்திரத்தைச் செபித்துக் கொண்டிரு. உனக்கு எல்லாச் சித்திகளும் கைகூடும். சில



காலம் பொறுத்து நாம் வருவோம்'' என்று கூறி விட்டுச் சென்றார்.

விப்பிரதன் என்ற அவ்வேடன் குரு மொழிப்படி அந்த உலர்ந்த கொம்பின் அருகில் அமர்ந்து விநாயக மந்திரத்தை உருவேற்றிக் கொண்டிருந்தான். தடிக்கு மூன்று காலங்களிலும் நீர் ஊற்றி வந்தான். ஆயிரம் ஆண்டுகள் கடந்தன. அத்தடி தளிர்த்துப் பூத்தது. அப்போது முற்கல முனிவர் அங்கு வந்தார். வேடனுடைய அன்பையும் உள்ளத்தின் உறுதியையும் கண்டு வியந்தார். கமண்டல நீரை அவன் மீது தெளித்தார். அவனுடைய பாவங்கள் பறந்தோடின. அவனுடைய புருவ நடுவில் தும்பிக்கை உண்டாகியது. முனிவர் அவனைத் தழுவிப் பிரணவ மந்திரத்தை உபதேசித்தார். ''நீ ஒரு கற்ப காலம் வாழ்வாய்; இத்தடி கற்பகத் தருவாக விளங்கி நினைத்ததை வழங்கும்'' என்றார்.

விப்பிரதன் புருவ நடுவில் தும்பிக்கை தோன்றியதால் புருசுண்டி என்று பேர் பெற்றான். பின்னர் புருசுண்டி ஆயிரம் ஆண்டுகள் தவஞ் செய்தார். அவர் முன் கணேசர் காட்சி தந்தார். புருசுண்டி விநாயகரைத் தரிசித்துத் துதித்தார். வீடு பேற்றை வேண்டினார். கணேசர் கருணை புரிந்து மறைந்தருளினார்.

புருசுண்டி விநாயக சொருபத்துடன் சீவன்முத்தராகத் தவஞ் செய்துகொண்டிருந்தார். தமது சுற்றத்தார்கள் நரகில் வேதனையடைந்துள்ளார்கள் என்பதை நாரத முனிவர் கூறக் கேட்டார். சுற்றத்தாருக்கு நற்கதி வழங்க வேண்டும் என்று எண்ணினார். மாசி மாதம் அமர பட்சத்தில் செவ்வாய்க்கிழமையில் வரும் சங்கட ஹர சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்தார். அவ்விரத பலனை விநாயகருடைய திருக் கரத்தில் நரகில் உள்ள சுற்றத்தாருக்குச் சேர வேண்டும் என்று தத்தம் செய்தார். அதனால் நரகில் கிடந்த சுற்றத்தார்கள் பாவம் தீர்ந்து விமானங்களில் ஏறி விண்ணுலகம் சேர்ந்தார்கள்.



பொன் மழை

இரா. புருஷோத்தமன்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் குப்பன் என்ற பெயருடன் ஒரு குடியானவன் வசித்து வந்தான். அவன் மிகவும் நல்லவன். நல்ல உழைப்பாளி. தினமும் அவன் வெகுசீக்கிரம் எழுந்து வேலை செய்யச் சென்றுவிடுவான். சூரியன் மறைந்த பிறகுதான் தன் வேலையை நிறுத்துவான். ஒரு நிமிட நேரத்தைக்கூட அவன் வீணாக்கமாட்டான். அப்படிப் பாடுபடுவான். இதனால் குப்பனுக்கு நல்ல வருவாய் வரும். குப்பனின் நிலத்தைப் பொன் விளையும் பூமி என்று எல்லோரும் சொல்லுவார்கள்.

குப்பன் இப்படி உழைத்து மகிழ்ச்சியோடு வாழ்வது ஒரு தேவதைக்கு மட்டும் பிடிக்கவில்லை. அதுதான் அதிர்ஷ்ட தேவதை. "நம்மை வணங்காமல் குப்பன் உழைப்புத் தேவதையை நம்பி வாழ்வது நம்மை அவமதிப்பது போல் அல்லவா இருக்கிறது?" என்று நினைத்தது. அதிர்ஷ்ட தேவதையின் மனத்தில் பொறாமைத் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. அதிர்ஷ்ட தேவதைக்கு எப்பொழுதும் உழைப்புத் தேவதையைக் கண்டால் பிடிக்காது. அதனால் உழைக்கும் குப்பனையும் அதற்குப் பிடிக்கவில்லை.

அந்த வருடம் குப்பனது நிலத்தில் விளைச்சல் அதிகமாகவே இருந்தது. அறுவடை செய்த தானியங்களைச் சேமித்து வைத்தான். மற்றவர்களுக்கும் கொடுத்தான். எல்லோருக்கும் மகிழ்ச்சி.

ஆனால் அதிர்ஷ்ட தேவதைக்கு மட்டும் கோபம் கோபமாக வந்தது. இருந்தாலும் கோபத்தை மறைத்துக் கொண்டது. பிறகு குப்பனுக்கு முன் தோன்றியது. அவனைப் பார்த்துக் கேட்டது: "நீ இந்த வருடம் உன் நிலத்தில் பயிர் செய்வாயா?"

"கட்டாயம் செய்வேன்" என்றான் குப்பன்.

"இந்த வருடம் பொன் மழை பெய்யப் போவது தெரியாதா, உனக்கு?" என்று அந்தத் தேவதை கேட்டது.

"அப்படியானால் என் பயிர்கள் அழிந்து விடுமே!" என்றான் குப்பன்.

"அதனால்தான் நான் பயிர் செய்யாதே என்கிறேன்" என்று கூறிய அந்தத் தேவதை மறைந்து விட்டது.

குப்பன் பிறகு அந்தத் தேவதை கூறியதை யோசித்துப் பார்த்தான். பொன் கிடைத்தால் அதில் எல்லாம் வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணி



மன்னரான மாடசாமி

வாண்டுமாமா

ரொம்பரொம்பக் காலத்துக்கு முன்னாலே ஓர் ஏழை இருந்தான். எந்தக் காலத்திலுமே ஏழையும் உண்டு, பணக்காரனும் உண்டு. அந்த ஏழைக்கு இரண்டு பிள்ளைகள். அண்ணனைவிடத் தம்பி அழகனாகவும் சாமர்த்தியசாலியாகவுமிருந்தான். இது அண்ணனுக்குப் பிடிக்கவில்லை. பொறாமைப்பட்டான். வயது ஆக ஆக அண்ணனின் பொறாமையும் விரோதமும் வளர்ந்து கொண்டு வந்தன. அதே மாதிரி தம்பியின் அழகும் திறமையும் வளர்ந்தன.

தம்பியை எப்படியாவது கொன்றுவிடவேண்டும் என்ற குரோத மனப்பான்மை கொண்ட அண்ணன் ஒரு நாள் அவனுடன் காட்டுக்குப் போனான். தம்பியுடன் ரொம்ப அன்பாகப் பேசியபடியே காட்டுக்குள் வெகுதூரம் அழைத்துப் போனான். தக்க சமயம் பார்த்துத் திடீரென்று தம்பிமீது பாய்ந்து அவனை அப்படியே ஒரு மரத்துடன் சேர்த்து இறுகக் கட்டிப் போட்டான். "நீ இங்கேயே இப்படியே பசியாலும் தாகத்தாலும் சாகவேண்டியதுதான். இந்தக் காட்டுக்குள் யாரும் வரமாட்டார்கள்; உனக்கு உதவவும் மாட்டார்கள்" என்று கூறித் தன் வழியே திரும்பிப் போய் விட்டான் அண்ணன்.

தம்பி என்ன செய்வான், பாவம். தன்மீது அண்ணனுக்கு அன்பில்லை என்று தெரியும். ஆனால் இப்படி ஒரு குரூரமான காரியம் செய்வான் என்று எதிர்பார்க்கவில்லை. பகலெல்லாம் பசியுடன் கட்டுண்ட நிலையிலேயே இருந்தான் தம்பி. இனி அவனுக்கு ஒரு பெயர் கொடுப்போம். அப்போதுதான் நான் கதை சொல்லவும் நீங்கள் படிக்கவும் வசதியாக இருக்கும். மாடசாமி என்று பெயரிடலாம் அவனுக்கு. இருட்டும் சமயத்தில் அந்த வழியாக ஆடுகளை ஓட்டிக் கொண்டு ஒரு கிழவன் வந்தான். அவன் முதுகில் பெரிய கூனல். மரத்தில் கட்டுண்டு கிடக்கும் மாடசாமியைக் கண்ட ஆட்டிடையன் "யாரப்பா உனக்கு இந்தக் கொடிய தண்டனையைக் கொடுத்தது?" என்று கேட்டான்.

மாடசாமி மடையனா, உண்மையைச் சொல்ல? "தண்டனையா? இது நானாக ஏற்றிக் கொண்ட சிகிச்சையல்லவா? உன்னைப் போலவே என் முதுகிலும் கூனல் இருந்தது. அதை நிமிர்த்தி நேராக்க ஒரு வைத்தியர், என்னை இப்படி இந்த மரத்துடன் வைத்துக் கட்டிவிட்டுப் போனார். இப்போது என் கூன் நிமிர்ந்து நேராகி விட்டது. இது வெறும் கட்டுமட்டுமல்ல. தகுந்த முறையில் தக்க இடத்தில் பல முடிச்சுக்களைப் போட்டுக் கட்ட வேண்டும். அப்போதுதான் கூன் நிமிரும். அந்த ரகசியமும் எனக்குத் தெரியும்" என்றான் மாடசாமி.

யாருக்குத்தான் ஆசை இருக்காது? கூனல் முதுகுடைய ஆட்டிடையன் மாடசாமியிடம் கெஞ்சினான். "தம்பி, தம்பி! என் கூனையும் நிமிர்த்திவிடப்பா. உனக்குப் புண்ணியமாக இருக்கும்" என்றான். மாடசாமியும் ஒப்புக் கொண்டான்.



'' கடல் இங்கு எப்போது வரும் என்று யாருக்குத் தெரியும்? அது வருவதற்குப் பல வருடங்கள் பிடிக்கலாம் அல்லவா ? அதற்குள் நான் கிழவனாகி இறந்துகூடப் போய்விடுவேனே. அப்படியே கடல் இப்பொழுதே வந்தால் கூட உன் படகு சுக்குநூறாக உடைந்து போய்விடுமே! பிறகு எப்படிப் பயணம் செய்வது ?'' என்றான் குப்பன்.

இதைக் கேட்ட படகோட்டி பலமாகச் சிரித்துவிட்டுப் பின்வருமாறு கூறினான்:


'' நீங்கள் எதிர்பார்க்கும் அந்தப் பொன் மழை பெய்வதற்கு ஆகும் காலத்தைவிடவா அதிக காலம் ஆகும்? நீங்கள் இப்படி வீணே வராத பொன் மழையைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் காட்டிலுமா நான் செய்யும் காரியம் வேடிக்கையாக இருக்கிறது ? அப்படியே நீங்கள் நினைப்பது போல் பொன் மழை பொழிந்தால் பொன்னைச் சாப்பிட முடியுமா? உண்ண உணவே இல்லாமல் இருக்கும்போது பொன்னால் என்ன பயன் ? தானியங்கள் அல்லவா உயிரைக் காக்கின்றன? அப்படிப்பட்ட சிறந்த தானியங்களை விளைவிக்காமல் வீணே இருப்பதால் அல்லவா உங்கள் நாட்டில் இப்போது பஞ்சம் தலைவிரித்தாடுகிறது.''

இதனைக் கேட்ட மக்கள் அனைவரும் மிகவும் வெட்கமடைந்து தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டனர். இருந்தாலும் குப்பன் மட்டும் மெல்ல அதிர்ஷ்ட தேவதையைப் பற்றிக் கூற எண்ணி, ''அதிர்ஷ்ட தேவதை....'' என்று ஆரம்பித்தான். உடனே குப்பனை இடைமறித்து உழைப்புத் தேவதை சொன்னது.

'' மக்களே ! ஆகாயத்திலிருந்து பொன் மழை பெய்யாது. பொன்னைவிடச் சிறந்த சூரிய ஒளியும் தண்ணீரும்தான் வரும். அதை நன்கு உபயோகித்து உங்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த நீங்கள் உழைத்தால் உங்களுக்குப் பொன் மட்டுமல்ல, அதைவிட விலை உயர்ந்த பொருட்களான உயிர் காக்கும் தானியங்களை கிட்டும். இனியும் இப்படி அதிர்ஷ்டத்தை நம்பி அழிந்து போகாதீர்கள். சோம்பேறித்தனமாக உட்கார்ந்து கொண்டு இருக்காதீர்கள். இப்போதே புறப்படுங்கள். உங்கள் பணிகளைச் செவ்வனே செய்யுங்கள். செய்யும் பணி எதுவானாலும் நேர்மையோடு உழைத்தால் எல்லாப் பணியும் சிறந்ததுதான்.''

உழைப்பின் உண்மையைக் கிராம மக்கள் அனைவரும் உணர்ந்தனர். உடனே அவர்கள் தங்கள் பணியைச் செய்ய ஆரம்பித்து விட்டனர். அதிர்ஷ்ட தேவதை இனியும் மக்களை ஏமாற்றித் தன் வலையில் விழ வைக்க முடியாது என உணர்ந்ததோ இல்லையோ பிடித்தது ஓட்டம். மீண்டும் அந்த நாடு செல்வம் கொழிக்கும் நாடாக ஆனது.

இருப்பும் தேவையும்!



காலண்டர்

அருவி மைந்தன்

வருடம் பிறந்ததும் வந்திடுவேன்
வரிசையாய் நாளும் கிழிபடுவேன்
நாளும் கிழமையும் காட்டிடுவேன்
நல்லது கெட்டது நானுரைப்பேன் !

மாதம் முழுதும் காட்டிடவே
மற்றொரு வடிவிலும் நானிருப்பேன்
ஜனவரி வந்தால் நானம்மா
ஜனங்களின் மூச்சே தானம்மா !


அரசு விடுமுறை தெரிந்திடுவேன்
அரிய நிகழ்ச்சியும் அறிந்திடுவேன்
விரும்பிடும் தோழனாய் விளங்கிடுவேன்
விண்கோள் நிலையும் விளம்பிடுவேன்.

வண்ண ஓவிய வலை வீசி,
வசமாய் விளம்பரம் பிடித்திருப்பேன்
அழகும், பயனும் அளித்திருப்பேன்
அதனால் எங்கும் பரந்திருப்பேன்.

காசுக்கு வாங்கும் காலண்டர்;
காலத்தை அளக்கும் கண்ணாடி
ஓசியில் தட்டும் நாள்காட்டி;
ஒப்பற்ற நல்ல நினைவூட்டி !

பஞ்சாங்கம் என்றால் பழிக்காதீர்!
பழம்பெயர் எனக்கும் அதுவேதான்!
காலத்தைக் காட்டும் கண்ணாடி;
காலண்டர் என்றார் பின்னாடி!

கடிகா ரத்தின் முன்னோடி— நான்
கண்கவர் வண்ணக் கண்ணாடி!
சுவரில் தொங்குவேன் முன்னாடி—எவரும்
சுருட்டிடு முன்னே வந்திடடி !





ஒரு நாட்டை ஆண்டு வந்த அரசனுக்கு வாரிசாக ஒரே ஒரு மகன் இருந்தான். மகன் வளர்ந்து நாட்டை ஆளும் தகுதியைப் பெற்றுவிட்டான் என்பதைக் கண்ட அரசன் மகனிடம் நாட்டை ஒப்படைக்கத் தீர்மானம் செய்தான்.

ஒரு நாள் மகனை அழைத்த அரசன், ''நீ விரைவில் ஒரு மணமகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்று கூறிப் பொன்னால் இழைக்கப்பட்ட ஒளி மயமான சித்திரக்கூடத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கு பல அழகிகளின் ஓவியங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. ஒப்பில்லா அழகிலும், இணையில்லா வர்ணனைகளிலும், மனத்தைக் கற்பனையில் ஆழ்த்தும் அழகுப் பெட்டகமாக ஒவ்வொன்றும் ஒன்றையொன்று மிஞ்சிவிடுவது போல் சிறப்பாக அமைந்திருந்தது.

''இவற்றில் எந்த அழகி உன் மனத்துக்குப் பிடித்திருக்கிறாளோ,



நீலக் கம்பளம்

லட்சுமி ராஜரத்தினம்

அவளை நீ மணமகளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்'' என்று அரசன் மகனிடம் சொன்னான்.

எல்லாவற்றையும் பார்வையிட்ட இளவரசன், ''இவர்களில் யாரும் எனக்குப் பிடித்தமானவர்களாக இல்லை. ஒருவராவது என் இதயத்தைத் தொடுபவர்களாக இல்லை. நம் இராஜ்யத்தைச் சுற்றிப் பார்த்து எனக்குத் தகுந்த மணமகளைத் தேர்ந்தெடுத்து வர அனுமதியுங்கள்'' என்றான்.

அரசனின் அனுமதியைப் பெற்ற இளவரசன் பயணத்தைத் தொடங்கினான்.

மலைகள், மலையடிவாரங்கள், காடுகள் தோட்டங்கள், நகரங்கள் என்று தன் நாட்டில் வெகு தூரம் சுற்றினான் இளவரசன். கிராமங்களில் தன் பார்வையைச் செலுத்தித் தேடிய பொழுது, அநேகம் பெண்கள் மிக அழகாகவும், புத்திசாலியாகவும், நற்குணம் உள்ளவர்களாகவும் திகழ்ந்தார்களேயானாலும் அவனுடைய விருப்பப்படி அமையவே இல்லை.

ஒரு நாள் ஒரு கிராமத்தின் எல்லையான சிறு மலை மேல் ஏறிச் சென்ற பொழுது பசுங் கொடியைப் போன்ற ஒரு பெண்ணைப் பார்த்தான். அவளைப் பார்த்த அக்கணத்திலேயே தன் விருப்பப்படி அமைந்தவள் அவள்தான் என்பதைப் புரிந்து கொண்டான்.

அவள் தன்னுடைய குடிசைக்குச் சென்றதும், அவனும் பின்னாலேயே சென்று அவளுடன் பேசத் தொடங்கினான்.

''அழகியே! என்னுடைய மனைவியாக இருக்க உனக்கு விருப்பமா?'' என்று கேட்டான்.

''நீ யார்?'' என்று அவனைக் கேட்டான் அந்த அழகி.

''நான் ஓர் இளவரசன்'' என்று அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''உன்னால் என்ன முடியும்? கலை, ...த் தொழில் என்று எதிலாவது சிறப் ...டந்திருக்கிறாயா?''

''நான் ஓர் இளவரசன். அதனால் எனக்குத் தொழில் எதுவும் தெரியத் தேவையில்லை.''


அந்தப் பெண் குலுங்கிக் குலுங்கி நகைத்தாள்.

''தொழில் எதுவும் தெரியாத ஓர் இளவரசன். இன்று இளவரசனாக இருப்பவன் நாளை அப்படி இருப்பது நிச்சயமில்லை. இளவரசனே! பதவியை இழந்தால் நீ எப்படி உன் மனைவி, குழந்தைகளைக் காப்பாற்றுவாய்? நீ ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டு வந்தால் நான் உன்னை மணந்து கொள்வேன். நீ தொழில் ஏதும் கற்றுக் கொள்ளாமல் இங்கே வராதே!''

இளவரசன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அளவில்லாத துயரத்துடன் குடிசையை விட்டுப் புறப்பட்டான். எந்தவிதமான தொழிலைத் தன்னால் கற்றுக் கொள்ள முடியும் என்ற முடிவுக்கு அவனால் வர முடியவில்லை. அரண்மனையை அடைந்த அவன் நடந்த விவரங்களைத் தன் தந்தையிடம் கூறினான்.

அரசன் புன்சிரிப்புத் தவழ, ''கவலைப் படாதே, மகனே! நாம் இதைப் பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவோம்'' என்று மகனுக்கு ஆறுதலாகச் சொன்னான்.

அரசன் எல்லாவிதமான தொழில்களிலும் தேர்ந்த நிபுணர்களையும், மேதைகளையும் தன்னுடைய கட்டளையின் பேரில் அரண்மனைக்கு வரவழைத்தான். அரசனுடைய கட்டளையை மேற்கொண்ட தச்சர்கள், பொற்



கொல்லர்கள், நெசவாளர்கள் செப்புத் தொழில் செய்பவர்கள் எல்லோரும் அரண்மனைக்கு வந்தார்கள். தங்களை வரவழைத்த காரணத்தைப் புரிந்து கொள்ளாமல், ஆச்சரியத்துடன் ஒருவருக்கொருவர் முணுமுணுப்புக் குரலில் பேசிக் கொண்டார்கள்.

சற்று நேரத்தில் அவர்களைக் காண அரசனும், இளவரசனும் வந்தார்கள். தொழிலாளர்கள் தங்கள் வந்தனத்தை அவர்களுக்குத் தெரிவித்தார்கள்.

''உங்களுக்கு இன்று மிகவும் நல்ல நாள்'' என்று அவர்களை வரவேற்ற அரசன் தொடர்ந்து, ''உங்களை எல்லாம் ஏன் இங்கே வரவழைத்தேன் என்பதை இப்பொழுது விளக்கமாகக் கூறுகிறேன். என் மகன் — அதாவது உங்கள் இளவரசன் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ள விரும்புகிறான். அவனுக்குத் தொழிலைக் கற்றுத் தர உங்களில் யார் முன் வரப் போகிறீர்கள்?'' என்று அவர்களைப் பார்த்துக் கேட்டான்.

அதிர்ச்சியுடன் தலையை ஆட்டிய தொழிலாளிகள், இளவரசனைத் தங்களில் ஒருவனாகக் கருதித் தொழிலைக் கற்றுத் தருவதென்பது நினைத்துப் பார்க்கவே இயலாத செயலில் ஒன்றாக இருந்தது.

''நல்லது ; யார் அதைச் செய்ய முன் வரப் போகிறீர்கள்?'' என்று மீண்டும் கேட்ட அரசன், பூட்டுத் தொழிலாளியைப் பார்த்தான். அவன் அரண்மனையில் பாதுகாப்பான இடங்களுக்குத் தேவையான பூட்டுத் தாழ்ப்பாள்களைத் திறமையுடன் செய்தவனாதலால் அவனிடம் அரசனுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது.

''நீங்கள் உங்கள் தொழிலில் சிறந்தவராதலால் இளவரசனுக்கு உங்கள் தொழிலைக் கற்பிக்க முன்வருவீர்களா ?'' என்று கேட்டான்.

''தங்கள் திறமை வாய்ந்த அரசாட்சியில் எதுதான் முடியாது ?'' — என்று புகழ்ச்சியாகக் கூறிய அத்தொழிலாளி, ''இருந்தாலும் இளவரசனுக்குப் பயிற்சியளிக்கும் அளவுக்கு எனக்குத் திறமையிருப்பதாகத் தெரியவில்லையே, அரசே ?'' என்றான் மிகுந்த பணிவுடன்.

''உன்னுடைய தொழிலைக் கற்றுக் கொள்ள எத்தனை காலம் பிடிக்கும் ?'' என்று கேட்டான் இளவரசன்.

''மூன்று வருடங்களுக்கும் மேல் ஆகும்.''

''அத்தனை காலம் என்னுடைய மணப் பெண் எனக்காகக் காத்துக் கொண்டிருக்க மாட்டாள்'' என்றான் இளவரசன்.

அரசன் மற்றொரு தொழிலாளியை விசாரிக்க, அவன் இரண்டாண்டு காலம் ஆகும் என்று பதில் அளித்தான்.

''அதுவும் நீண்ட காலம்தான்'' என்று அதையும் நிராகரித்தான் இளவரசன்.

அரசன் ஒவ்வொருவராக விசாரித்துக் கொண்டு வந்தான். கடைசித் தொழிலாளியான வயதான நெசவாளியிடம் இதே கேள்வியைக் கேட்டான் அரசன். அந்த வயதான நெசவாளி தன் தொழிலில் மிகவும் திறமை வாய்ந்தவன். அயல் நாட்டவர்கள் கூட அவனுடைய கம்பளங்களில் மனத்தைப் பறிகொடுத்து வாங்கிச் செல்லும் அளவுக்குத் திறமை வாய்ந்தவன்.

''உன்னால் இளவரசனுக்கு உன் கைத்தொழிலைக் கற்பிக்க முடியுமா ?'' என்று அரசன் கேட்ட பொழுது வயதான அந்த நெசவாளி ''மூன்று நாட்களில் இத்தொழிலைக் கற்றுத் தந்து விடுவேன்!'' என்றான்.

''அப்படியானால் இத்தொழிலையே நான் கற்றுக் கொள்கிறேன். மூன்று நாட்கள் என்பது நீண்ட காலம் இல்லை'' என்றான் இளவரசன்.

இளவரசனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான் அந்த வயதான நெசவாளி. மூன்று நாட்கள் கழித்து அரண்மனைக்குத் திரும்பிய இளவரசனுக்கு மற்றவர்கள் கண்டு வியக்கும் முறையில் கம்பளங்களை நெய்யத் தெரிந்திருந்தது. இளவரசன் அழகான கம்பளம் ஒன்றை நெய்து அவனை மணக்கப் போவதாகக் கூறிய அழகியிடம் காட்டுவதற்காகச் சென்றான்.

அந்த அழகி தங்கியிருக்கும் மலைக்குச் சென்று அவளுடைய குடிசையை அடைந்தான். அவளுக்கு முன்னால் தான் கொண்டு போயிருந்த அந்த அழகான கம்பளத்தை விரித்தான்.

''நான் எந்தத் தொழிலைப் பயின்று வந்திருக்கிறேன், பார். இப்பொழுது நீ என்னை மணந்து கொள்ளச் சம்மதிக்கிறாயா ?'' என்று அவளிடம் ஆசையுடன் கேட்டான்.

''ஓ...... இப்பொழுது உன்னை மணந்து கொள்ள எந்தத் தடையும் இல்லை'' என்று கூறினாள் அந்த அழகி.

இளவரசன் தன்னுடன் அந்த அழகியை அரண்மனைக்கு அழைத்து வந்தான். அரசனும் அரசியும் அவர்களை வரவேற்று, வாழ்த்தி மிக்க மகிழ்ச்சியுடன் திருமணத்தை முடித்து வைத்தார்கள். இளவரசனும் அவன்

மனைவியும் அமைதியாய் வாழ்ந்து வந்தார்கள்.

சிறிது காலத்துக்குப் பிறகு பெரிய அரசன் இறந்த பிறகு இளவரசன் அரசனானான்.

ஒரு நாள் அவன் தன் மனைவியிடம், "நம் நாட்டைப் பற்றியும், என் அரசாட்சியைப் பற்றியும் மக்கள் கொண்டுள்ள கருத்தை அறிய மாறு வேடத்தில் நாட்டைச் சுற்றி வரப் போகிறேன்" என்று கூறினான்.

அதன்படி ஏழைமைக் கோலம் பூண்டு கையில் ஒரு பையையும், கம்பையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். நாட்டில் அவன் இல்லாத பொழுது அவன் தன் மனைவியைத் தனக்குப் பதிலாக நாட்டைக் கவனிக்க அமர்த்தி யிருந்தான்.

அரசன் நீண்ட நாட்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் சுற்றித் திரிந்து வந்தான். அப்படிச் சுற்றித் திரிந்த பிறகு அரண்மனைக்குத் திரும்ப வேண்டிய குறித்த காலம் வந்துவிட்டது.

ஒரு நாள் மாலை. மலையில் சுற்றிய அவன் தன் வழியைத் தவற விட்டு விட்டுப் பள்ளத்தாக்குகளில் சுற்றி வந்தான். அந்தப் பள்ளத்தாக்கைப் பாம்புப் பள்ளத்தாக்கு என்று அழைப்பதுடன் அங்கு பல தீய செயல்கள் வேறு நடைபெறுவதாகச் சொல்லுவார்கள். அரசன் வழி தேடிச் சுற்றி அலைந்த பொழுது கடைசியில் திருடர்களின் கைகளில் சிக்கிக் கொண்டான்.

அவர்கள் அரசனைத் தங்கள் குகைக்கு இழுத்துச் சென்றார்கள். அரசன் பலமாக, "என்னை எப்படித் தொட்டீர்கள்? நான் இந்த நாட்டு அரசன்" என்று கத்தினான்.

திருடர்கள் நகைத்தார்கள். சிலர் ஏளனம் செய்து கிண்டலாக, "அது உண்மையானால் ஏராளமான பொருட்களை எங்களிடம் கொடுத்துவிட்டு நீ விடுதலை பெற்றுப் போ" என்று கேலி பேசினார்கள்.

"நாம் இவனைத் தீர்த்து விடுவோம்" என்று சிலர் கூறினார்கள்.

அரசன் பதில் சொன்னான்: "என்னிடம் இப்பொழுது பணம் இல்லை. நம் நாட்டில் இதற்கு முன்னால் எவருமே பார்த்திராத அளவுக்கு ஓர் அழகிய கம்பளத்தை நெய்து தருகிறேன். என்னைக் கொல்லாதீர்கள். அந்தக் கம்பளத்தை விற்றால் உங்களுக்குத் தேவைக்கு அதிகமான பணம் கிடைக்கும்"


திருடர்கள் சிரித்தார்கள்.

"அந்தக் கம்பளத்தை நெய்வதற்கு நீண்ட காலம் ஆகுமோ?"

"இல்லை; மூன்றே நாட்களில் நெய்து விடுவேன்."

"அப்படியானால் நெய்வதற்குத் தயாராக இரு" என்று கூறிய திருடர்கள், "நாங்கள் மூன்று நாட்கள் தான் காத்துக் கொண்டிருப்போம். ஆனால் நீ தாமதமின்றி வேலையைத் தொடங்குவது நல்லது" என்று எச்சரித்தார்கள்.

அவர்கள் அரசனைக் கூண்டு போன்ற ஒரு தனி இடத்தில் அடைத்து நெய்வதற்குக் கம்பளி, பட்டு நூல்களையும் கொடுத்தார்கள். அரசன் கம்பளத்தைக் குறிப்பிட்ட மூன்று நாட்களுக்கு முன்னரே முடித்துவிட்டான். அந்த நீலக் கம்பளத்தைப் பொன் வண்ணத்தால் அலங்கரித்து, நான்கு ஓரங்களிலும், அளவற்ற மலர்க் குவியல்களின் நடுவே இறக்கையை விரித்த பறவைகள்



பறப்பன போன்று அருமையான மாதிரியில் நெய்திருந்தான். கம்பளத்தைப் பார்த்த திருடர்கள் அசந்து போனார்கள்.

''இதை விற்றால் நீ சொன்னது போல் நிறையப் பணம் கிடைக்கும். இதை விற்றுப் பணத்தைக் கொண்டு வருகிறோம்'' என்று அரசனிடம் கூறினார்கள் திருடர்கள்.

தங்களுடன் அந்தக் கம்பளத்தை எடுத்துச் சென்று நகரம் முழுதும் அதை விற்பதற்காகச் சுற்றி அலைந்தார்கள். கடைத் தெருக்களில் வியாபாரிகளிடம் அதை விலை பேசி விற்க முயன்றார்கள். எவரிடமும் அதை வாங்கப் பணம்தான் இல்லை. ஒவ்வொருவரும் அதன் அழகைக் கண்டு வியந்தாலும், அதை வாங்குமளவுக்குப் பணமில்லை என்று வாங்காமல் சென்றார்.

அன்று மாலை கோபத்துடன் அந்தத் திருடர்கள் அரசனைத் தனிக் கூண்டுச் சிறையில் சந்தித்தார்கள்.

''உன் கம்பளத்தால் எங்களுக்கு எந்த விதமான பயனும் இல்லை. யாரிடமும் இதை வாங்குமளவுக்குப் பணமும் இருக்கவில்லை. அதனால் நாளை உன்னைக் கொல்லப் போகிறோம்.''

இதைக் கேட்ட அரசன், ''கொஞ்சம் பொறுங்கள். நாளை இதை அரண்மனைக்குக் கொண்டு போய் அரசியிடம் காட்டினால் மகாராணி இதை நிச்சயம் வாங்குவார்கள்'' என்றான்.

அந்தத் திருடர்களின் மனம் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது.

மறுநாள் காலை திருடர்களில் இருவர் அந்தக் கம்பளத்துடன் அரண்மனைக்குச் சென்றார்கள். அரண்மனை வாயிற் காவலர்கள் அவர்களை உள்ளே விட மறுத்தனர். ''அரசியார் அதிக வேலையாக இருக்கிறார். உங்களைப் போன்றவர்களைப் பார்ப்பதற்கு அவருக்கு நேரம் இல்லை'' என்றார்கள்.

அந்தத் திருடர்கள் கம்பளத்தை அவர்கள் முன்னால் விரித்துப் போட்டதும் காவலர்கள் அதிசயித்துப் போனார்கள். உடனே அவர்களை அரசியிடம் அழைத்துப் போனார்கள். அரசி குறித்த நேரத்தில் வந்து சேராத தன் கணவனைப் பற்றியே நினைத்துக் கவலைப் பட்டு அழுது கொண்டிருந்தாள். திருடர்கள் பணிவுடன் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கம்பளத்தை அரசி முன் விரித்துக் காட்டினார்கள்.

''அரசியாரே! இதோ பாருங்கள், எத்தனை அழகான கம்பளம் எங்களிடம் இருக்கிறது!. இதை வாங்க நீங்கள் விரும்பவில்லையா ?''

அரசி பிரமிப்புடன் அந்தக் கம்பளத்தைப் பார்த்தாள். கம்பளத்தின் ஓரங்களில் சாதாரண அலங்கரிப்பு இல்லை. கூர்ந்து பார்த்த அவளது கண்களுக்கு நுணுக்கமான பூவெழுத்துக்கள் தெரிந்தன. ''நான் இந்தத் திருடர்களின் கைதியாகப் பாம்புப் பள்ளத்தாக்கில் இருக்கிறேன். உதவி அனுப்பாவிட்டால் இவர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள்.''

அந்தக் கெட்டிக்கார அரசி எதையும் வெளிக் காட்டாது மனத்தினுள் படித்துப் பார்த்தாள். அந்தக் கம்பளத்தை விலைக்கு வாங்கிக் கொண்டு திருடர்களை வெளியே அனுப்பினாள். அவர்கள் வெளியேறியதும் தன் அரசாங்க உயர் அதிகாரிகளை யெல்லாம் அழைத்துத் திருடர்களைப் பிடித்து அரசனை விடுவிக்கக் கட்டளை இட்டாள்.

மாலையில் தங்கள் குகை வாயிலில் அந்தத் திருடர்கள் தங்களுக்குக் கிடைத்த பணத்தைப் பங்கு போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். திடீரென்று வெளிப்புறம் சத்தம், சலசலப்பு, காலடி ஓசைகள் எல்லாம் கேட்டன. வீரர்கள் திடீரென்று நுழைந்து அவர்களை வளைத்துக் கொண்டனர்.

வீரர்கள் குகையை இடித்து அரசனைத் தேடினார்கள். கடைசியில் தனிக் கூண்டு போன்ற இருண்ட அறையில் அரசனைக் கண்டுபிடித்தார்கள். கிழிந்த ஆடைகளுடன், வெளுத்த உருவமாய் அரசன் வெளியே வந்தான். திருடர்கள் பிடிபட்டார்கள்.

நாடு திரும்பிய அரசன் மிகுந்த களைப்புடன் காணப்பட்டான். சற்றே சிரம பரிகாரம் செய்து கொண்ட பின்னர் அரசியுடன் நந்தவனத்துக்குச் சென்றான். ரோஜாப் புதரடியில் அமர்ந்து கொண்டு அரசியிடம் ''தொழில் கற்றுக்கொள்ள வேண்டி நீ என்னைத் தூண்டியதாலேயே நான் பிழைக்க முடிந்தது'' என்றான். அதற்கு அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்: ''தொழில் தெரிந்ததால் உங்களால் சமயோசிதமாகத் தப்ப முடிந்தது. தொழில் தெரியாத வெறும் அரசனாக மட்டும் இருந்திருந்தால் உங்கள் நிலை எத்தனை பயங்கரமாக இருந்திருக்கும்?''

ரோஜா இதழ்கள் அதனை ஆமோதிப்பது போல் காற்றில் பொல பொலவென உதிர்ந்தன. அரசனும், அரசியும் மகிழ்ச்சியுடன் கரங்களை இணைத்துக் கொண்டு சிரித்தனர்.

வராஹ மிகிரர்

இரண்டாம் சந்திரகுப்த மௌரியரின் ஆட்சிகாலம். அவர் அவையை அலங்கரித்தவர்களுள் வராஹ மிகிரரும் ஒருவர். வான் இயலை ஆராய்ந்து அறிந்த அறிவாளி. அவருக்கு அப்பெயர் எப்படி வந்தது தெரியுமா? இவருக்கு இவர் தந்தையார் இட்ட பெயர் மிகிரர் என்பதே. மன்னர்களுக்கு ஜோதிடம் சொல்வது இவரது வழக்கம். ஒரு முறை அரசருக்கு ஜோதிடம் சொல்லும்போது குறிப்பிட்ட சமயத்தில் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தை அதன் பதினைந்தாவது வயதில் ஒரு பன்றியினால் மாலை நேரத்தில் இறக்க நேரிடும் என்று கூறினார். அரசருக்கு உடனே கோபம் வந்து விட்டது. ஆயினும் ஜோதிடரான மிகிரர் கூறியபடி நடக்கிறதா பார்க்கலாம் என்று உறுதி கொண்டார். அரசியின் மகப் பேறு காலம் நெருங்கியது. ஜோதிடர் குறிப்பிட்ட நாளன்றுதான் மகப் பேறு நிகழ்ந்தது. அரசிக்கு ஒரே கலக்கம். ஆனால் அரசரோ மனம் தளராது குழந்தையை வளர்த்து வந்தார். மைந்தனும் நாடு புகழும் அளவில் பல வீர தீரச் செயல்கள் புரிந்து பதினைந்து வயதுக்குள் நாட்டுமக்களின் ஆதரவையும், அன்பையும் பெற்றான். ஜோதிடர் குறிப்பிட்ட வயதை நெருங்கும்போது அரசர் எதற்கும் தம் மகனைப் பத்திரமாகப் பாதுகாக்க எண்ணினார். ஆகவே அவர் மகனுக்குப் பதினைந்து வயதாகும்போது தமது மாளிகையில் ஒரு தனி அறை கட்டி அதில் அரசகுமாரனுடைய நண்பர்களையும் அரசகுமாரனையும் இருக்கச் செய்தார். அவர்களும் அவ்வாறே இருந்தனர். ஒரு நாள் மாலை மயங்கும் நேரம். அறைக்குள் மிகவும் புழுக்கமாக இருப்பதாகக் கூறி, அரண்மனையின் உப்பரிகைக்குச் சென்று படுத்துக் கொள்ளலாம் என்று நண்பர்களுடன் இருள் கவியும் நேரத்தில் உப்பரிகைக்குச் சென்று படுத்தனர். குளிர்ந்த தென்றலினால் கொஞ்ச நேரத்தில் எல்லாரும் உறங்கி விட்டனர். அந்த நாட்டு அரசருடைய கொடியின் சின்னம் பன்றி. அரண்மனையின் உப்பரிகையில் அவர்கள் கொடிக் கம்பத்தின் கீழேதான் படுத்திருந்தனர். கொடிக் கம்பத்தின் உச்சியில் வெண்கலத்தால் ஆன பன்றிச் சிலை ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. அவர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது தென்றல் திடீரென்று பலத்த காற்றாக மாறி வீசியது. அதனால் அக்கம்பம் முறிந்து மல்லாந்து படுத்திருந்த அரச குமாரனது மார்பின் மீது விழுந்தது. விழுந்த வேகத்தில் பன்றிச் சிலையின் கூர்முனை அரச குமாரனது மார்பில் குத்தி அந்த நிமிடமே அரச குமாரனது உயிர் பிரிந்தது. மகனைக் காண வந்த மன்னர் அவனை அவனது அறையில் காணாததால் உப்பரிகைக்குப் போய்ப் பார்த்தபோது, அங்கு கண்ட காட்சி அவரை நிலைகுலைய வைத்து விட்டது.

மிகிரரின் வாக்குப் பலித்ததைக் கண்ட மன்னர் ஜோதிடத்தில் வல்லுனரான மிகிரரை வரவழைத்து அவருக்குப் பல பரிசுகளை வழங்கினார். பன்றியின் மூலம் மன்னன் மகனுக்கு முடிவு வரும் என்று கூறி அவ்வாறே பலித்ததால் அவரை மக்கள் யாவரும் பன்றியின் பெயராகிய வராகம் என்பதைக் கொண்டு ''வராஹ மிகிரர்'' என்று அழைக்கலாயினர். இதனால் மிகிரராக இருந்த இவருடைய பெயர் ''வராஹ மிகிரர்'' என்று ஆயிற்று. இந்த வராஹ மிகிரர்தான் ஜோதிடத்தின் தந்தையாவார்.

—என். பத்மா வேதாந்தம்



நிபந்தனை

எஸ். தமிழ்வாணி

மகா கஞ்சனான ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்கு ஏராளமான நிலபுலன்கள் இருந்தன. ஆனால் அவனிடம் வேலையாட்கள் நீடித்து வேலை செய்யவில்லை. வேலைக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. அப்படியே வந்தாலும் சில நாட்களில் அவர்கள் சொல்லாமல் ஓடிவிடுவார்கள். அவர்களிடம், 'ஏன், இப்படி ஓடி விடுகிறீர்கள்?' என்று கேட்டால், 'என்ன ஐயா செய்வது ? எங்கள் எஜமானன் பயிர் செய்யும் நாட்களில் எங்களிடம் அன்பாக நடந்து கொள்கிறார். ஆனால் அறுவடைக் காலத்திலோ வயிற்றுக்கு உணவுகூடத் தருவதில்லை. அரைப் பட்டினியுடன் வேலை செய்வது எப்படி?' என்றுதான் பதில் கூறினர்.

பணக்காரக் கஞ்சன் தன் வேலைக்காரர்களை நடத்தும் விதம் பற்றி அக்கம்பக்கமெல்லாம் செய்திகள் பரவிவிட்டதால் வெகுதூரத்திலிருந்து கூலியாட்களைக் கொண்டு வரும்படியான நிலை ஏற்பட்டது. இதனால் கஞ்சன் கவலையில் ஆழ்ந்திருக்கும்போது ஓர் இளைஞன் அவனிடம் வேலை செய்ய முன் வந்தான். அவன் பெயர் வாசன். கிராமத்துக்கு வந்ததும் கஞ்சனைப் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொண்டான். 'ஓ. அப்படியா சமாசாரம்! நான் ஓடி வரமாட்டேன்' என்று கூறிவிட்டுக் கஞ்சனின் வீட்டை நோக்கிச் சென்றான்.

வலிய வேலை தேடி வந்துள்ள இளைஞனைக் கண்ட கஞ்சனுக்கு ஒரே ஆச்சரியம். '' நீ வருடம் முழுதும் வேலை செய்வாயா ? நடுவில் ஓடிவிட மாட்டாயே?'' என வினவினான். ''கூலியைப் பற்றிய விஷயம் திருப்தியானால் வேலையைப் பற்றிய ஆட்சேபணையில்லை'' என்றான் வாசன்.

''கூலி என்ன கேட்கிறாய் நீ?''

''ஐயா! உங்களிடம் வேலை ஆட்கள் நீடித்து வேலை செய்வதில்லை எனக் கேள்விப்பட்டேன். நான் அவ்விதம் ஓடிவிட மாட்டேன். கூலியாக நான் கேட்பது முதல் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஒரு பிடி நெல்லும் ஒரே ஒரு சோளக் கதிரும்தான். நெல்லை விதைக்கத் தாழ்வான நிலமாகவும், சோளத்தை விதைக்க மேட்டு நிலமாகவும் இரண்டு அடி தாருங்கள், போதும். இதில் விளையும் விதைகளை மீண்டும் விதைக்க எவ்வளவு நிலம் தேவையோ, அவற்றை எனக்கு அவ்வப்போது தந்தால் போதும். ஒரு நாளைக்கு ஒரே ஒரு முறை இலை நிறையச் சாப்பாடு போட்டால் போதும். வாழை இலையில்தான் சாப்பிடுவேன். ஒரே ஒரு முறை பரிமாறிவிட வேண்டும். மீண்டும் கேட்கமாட்டேன். ஆனால் அந்த ஓர் இலை நிறையா விட்டால் நான் சும்மாயிருக்க மாட்டேன். நான் கடினமாக உழைக்கத் தயார். இந்த நிபந்தனையை மீறிவிட்டால் என் சுண்டுவிரலை நீங்கள் வெட்டிவிடலாம். நீங்கள்



மீறிவிட்டாலும் உங்கள் சுண்டுவிரலை வெட்டிக் கொள்ள எனக்கு அனுமதியுண்டு'' என்றான்.

கஞ்சனுக்கு ஒரே ஆனந்தம். 'கூலியே கொடுக்க வேண்டாம். ஒரு நாளைக்கு ஒரு முறை சாப்பாடு போட்டால் போதும். ஒரு பிடி நெல் விதைக்கவும் ஒரு சோளக் கதிர்மணிகளை விதைக்கவும் இடம் வேண்டுமாம் — இது என்ன பிரமாதம்?' என நினைத்தான். ஆகவே தன் சம்மதத்தைத் தெரிவித்து நிபந்தனைகளுக்கும் ஒப்புக் கொண்டுவிட்டான்.



வாசன் கஞ்சனிடம் வேலை செய்ய ஆரம்பித்தான். முதல் நாள் அவன் உணவருந்த வந்தபொழுது மூன்று அடி நீளமுள்ள வாழை இலையை எடுத்துத் தன் முன் போட்டுக் கொண்டு அமர்ந்தான். மனத்துக்குள் அவனைத் தூற்றிக் கொண்டே கஞ்சனின் மனைவி அவனுக்கு உணவு பரிமாறினாள். 'நல்ல ஆளைத் தேடிப் பிடித்தீர்கள். ஒரு பானை சோறல்லவா தின்கிறான்?'' என்றாள் கணவனிடம்.

''பரவாயில்லை. அவன்தான் கூலி வாங்குவதில்லையே? வேலை நன்றாகச் செய்கிறான்'' என்றான் கஞ்சன்.


வாசன் நன்றாகச் சாப்பிட்டான். சற்றும் சோம்பலில்லாது உழைத்தான். வருட முடிவில் நிபந்தனையின்படி ஒரு பிடி நெல்லும் — ஒரு சோளக் கதிரும் கூலியாக அளிக்கப்பட்டன.

விதை விதைக்கும் பருவம் வந்தது. வாசன் மேட்டு நிலத்தில் சோள மணிகளை விதைத்தான். தாழ்வான இடத்தில் நெல்லையும் விதைத்தான். பிறகு கஞ்சனை அழைத்து வந்து தான் எடுத்துக் கொண்டிருந்த நிலத்தையும் காட்டினான். அதைச் சுற்றிச் சிறிய வேலி எழுப்பிக் கொண்டான். வாசனுடைய சோளமும், நெல்லும் விளைந்தன. விளைந்தவற்றை விதைக்காகப் பத்திரப்படுத்தி வைத்தான் அவன். மறு வருடம் அவன் கூலியாக எதையுமே பெற்றுக் கொள்ளவில்லை. தன்னிடமிருந்த விதைகளை மட்டும் விதைக்க நிலம் எடுத்துக் கொண்டான். இம்முறை நிலம் சற்று அதிகமாகத் தேவைப்பட்டது. அறுவடையில் ஒரு கூடை நெல்லும், ஒரு கூடை சோளமும் கிடைத்தன. அவற்றைப் பத்திரப்படுத்திக் கொண்டான். வாசனின் வேலையில் எவ்வித குற்றமும் இல்லாதிருந்தது. வஞ்சனையின்றி உழைத்தான். ஒருவேளை வயிறு நிறையச் சாப்பிட்டான்.


இவ்வாறு சில வருடங்கள் கழிந்தன. கஞ்சன் கவலையில் ஆழ்ந்தான். வாசனுக்கு வருடத்துக்கு வருடம் விதை விதைக்க அதிகமான இடம் தர வேண்டி வந்தது. நிபந்தனையில் அவன் ஒப்புக் கொண்ட விஷயமல்லவா அது ?

கருமி தன் முட்டாள்தனத்துக்காக வருந்தினான். கொஞ்ச வருஷங்களில் மேட்டு நிலமும், பாசன நிலமும் பெரும் பகுதி வாசனுக்குச் சொந்தமாகி விட்டன. கருமி பஞ்சாயத்தாரிடம் சென்றான். ஆனால் நியாயம் வாசனின் பக்கம் இருந்தது. பணக்காரக் கருமி ஏழையாகிவிட்டான். ஏழைகளை வருத்தியவன் அல்லவா? அவனுக்கு அதற்குரிய தண்டனை கிடைத்ததில் வியப்பென்ன ?


ஜெய் ஹனுமான் ②
கதை: ரா. கணபதி: சித்திரம்: விஜு
அன்று கிரஹண தினம். சூரியனை விழுங்கிப் பின் உமிழும் படியான வரம் பெற்றிருந்தன ராகு, கேது என்ற பாம்புகள். அதன்படி வந்தவன்தான் கருநாகமான ராகு.
நான் உண்ணப்போகும் உணவுக்குக் குறுக்கே புகுந்த பயல் யாரடா நீ?
அஞ்சனை மகனின் பிடியிலிருந்து அரும்பாடுபட்டு விடுவித்துக் கொண்டு ஓடிய ராகு.....
அப்பா! இது குழந்தையின் பிடியாகத் தெரியவில்லையே! மூச்சே திணறிப்போச்சே....
இந்திரனே! எனக்களித்த வரத்தின்படி கிரஹண காலத்தில் சூரிய ஒளியை உண்ணப்போன என் உயிரையே ஒரு குரங்குக் குட்டி பறிக்கப் பார்க்கிறது. அதை நீங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே, இது நியாயமா?
கவலைப் படாதே ராகு. சின்னக் குழந்தை விளையாட்டைக் கொஞ்சம் ரசித்தேன். இதோ உன் உணவை உனக்கு வாங்கித் தருகிறேன்
குழந்தாய்! நான் உனக்கு அமிர்தம் தருகிறேன். கற்பக விருட்சத்திலிருந்து சுவை மிக்க கனிகளைத் தருகிறேன். சூரியக் கனியைப் பிடிக்க முயலாதே. இன்று அதன் ஒளியை உண்ண வேண்டியவன் ராகு. ஆகவே...



குழந்தையைக் காணாது தவித்துக்கொண்டிருந்த அஞ்சனையிடம் வருகிறார் வாயு பகவான்.
அஞ்சனா, அஞ்சாதே! இதோ உன் குழந்தை!
பிராணேசா! உங்கள் விருப்பப் படியே வாயு வின் அருளால் அழகான குழந்தை யைப் பெற்று வந்துள் ளேன். இந்தாருங்கள்.
குழந்தை வளர்ந்து, கல்வி கற்க வேண்டிய பருவம் வந்ததும்...
ஆஞ்சநேயா! வா,வா! வாக்குப்படி நானே உனக்குக் குருவாக இருந்து கலைகளைக் கற்பிக்கிறேன்.
இரண்டாவது முறையாகச் சூரியனை நோக்கித் தாவினார் வாயுகுமாரர்.
மாருதி! என் வேகத்துக்கு என்னோடு வருவாயா? நான் சொல்லச் சொல்ல நீ கிரகித்துக் கொள்ள வேண்டும்.
வருகிறேன் - உங்கள் முகம் பார்த்தபடி பின்னோக்கியே வருவேன்.
நான்கு வேதங்கள் ஆறு சாஸ்திரங்கள் ஒன்பது இலக்கணங்கள் அறுபத்தி நான்கு கலைஞானங்கள் அத்தனையும் கற்றுத் தேர்ந்தார் அனுமார். ஒரு தடவை கேட்டாலே போதும், மனப்பாடமாகி விடும் வல்லமை பெற்றவர் வாயு குமாரர்.
தொடரும்



வருகிறது வால் நட்சத்திரம்!

○ ○ ○ ○ குழந்தை நாதன் ○ ○ ○ ○

எழுபதாயிரம் மைல் வேகம்—
எழுபத்தையாயிரம் வருஷ மறுவிஜயம்!

வானவெளி யெனும் அகண்டாகாரத்திலிருந்து மணிக்கு எழுபது ஆயிரம் மைல் வேகத்திலே, வால் நட்சத்திரம் ஒன்று வந்து கொண்டிருக்கிறது. நவம்பர் மாத இறுதிவாக்கில், சூரியோதயத்துக்குச் சற்று முன்னர் கீழ் வானத்தில் தென்படும்; கிறிஸ்துமஸ் சமயத்தில் வானமெல்லாம் மத்தாப்புக் கொளுத்தியது போல் ஒளி வீசும்; ஜனவரி மாத நடுவில், சூரியாஸ்தமனத்துக்குப்பின் புலப்படத் தொடங்கி, நாளடைவில் மறைந்துவிடும். இப்புதிய வால்நட்சத்திரத்துக்கு கோஹுடெக் (Kohoutek) எனப் பெயரிட்டிருக்கிறார்கள். புறப்பட்டுவரும் புதிய வால்நட்சத்திரத்தைச் சென்ற மார்ச் மாதத்திலேயே கண்டு பிடித்து அறிவித்த செக்கோஸ்லேவிய விஞ்ஞானியான லூபோஸ் கோஹுடெக்கின் பெயரே இதற்குச் சூட்டப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டில் புலப்பட்ட வால்நட்சத்திரங்களில் எல்லாம் இதுவே மிக மிகப் பிரகாசமாய் விளங்கும் என வான சாஸ்திரிகள் சொல்கிறார்கள். இம்முறை வந்து வானவெளிக்குள் ஊடுருவும் இந்த வால்நட்சத்திரம் அடுத்தாற்போல், எழுபத்தையாயிரம் வருஷங்களுக்கு அப்புறம்தான் பூமியில் உள்ளோர் கண்களுக்கு மறுபடியும் புலப்படுமாம் !

ஒரு நூற்றாண்டில் மூன்று அல்லது நான்கு!

இரவு நேரத்தில் வான மண்டலத்தில் அவ்வப்பொழுது புதிய புதிய ஒளி வீச்சுக்களைக் காணலாம். இவற்றை எரி நட்சத்திரங்கள், விண்வீழ் கொள்ளிகள் (Meteors) என அழைக்கிறோம். ஆனால் வால்நட்சத்திரங்கள் என்பன, இவற்றைக் காட்டிலும் மிக மிக அபூர்வமாகவே நமக்குப் புலப்படுகின்றன.

ஒரு நூற்றாண்டில் மூன்று அல்லது நான்கு தடவைகள், வால்நட்சத்திரங்கள், சூரிய மண்டலத்தை நெருங்கிச் செல்வதை நம்மால் காண முடியும். இவை சூரியனைச் சுற்றியபடி சுருட்டைப் போல் நீண்டதொரு வட்டப் பாதையில் இயங்குகின்றன. இந்த நீளமான பாதையில் செல்லும் இவை, தொலை தூரத்தில் உள்ள நட்சத்திரங்களைகூட எட்டிப் பிடிக்கும் அளவுக்குப் போய்விடுகின்றன. இவ்வாறு நீண்ட பாதையில் சுழலும் வால் நட்சத்திரங்கள், வான வெளியில் ஒரு முறை சுற்றி வர ஆயிரக் கணக்கான வருஷங்கள் வரை ஆகுமாம்!

சூரியன் உள்ளிட்ட கிரகங்களின் ஈர்ப்புக்கு வால்நட்சத்திரங்கள் உள்ளாகின்றன. நீண்ட வட்டப் பாதையில் சுழன்று வந்த வால்நட்சத்திரங்களில் சில இவ்வித ஈர்ப்புக்கு ஆளானதால், அவற்றின் அயனப் பாதையும் குறுகிப் போவதுண்டு. வியாழக் கிரகத்தால் ஈர்க்கப்பட்ட வால் நட்சத்திரங்கள் பல உள; இவை சூரியனைச் சுற்றி வர ஆறு வருடங்கள் வரை எடுத்துக் கொள்ளுகின்றன. 'நெப்ட்யூன்' எனப்படும் கிரகங்களுக்கு அப்பால் வரை சென்று திரும்பும் வால்நட்சத்திரங்கள் எஞ்சியவை. இவ்வாறு சூரியனையும், நெப்ட்யூனையும் சுற்றி வரும் வால் நட்சத்திரங்களில் மிகவும் பிரபலமானது, பிரகாசமானது 'ஹாலி' நட்சத்திரம் எனப்படும். 1910இல் புலப்பட்ட இந்த ஹாலி நட்சத்திரம், மறுபடியும் 1985 அல்லது 1986ல் வரும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

தலை—பத்து லட்சம் மைல்
வால்—பத்து கோடி மைல்

தொலைநோக்கி வழியாகவோ வெறும் கண்ணாலோ நாம் பார்க்கும் வால்நட்சத்திரத்தின் அமைப்பு விந்தையானது. அதற்குத் 'தலை'யும் 'வாலும்' உண்டு. 'கோமா' எனப்படும் 'எரிவாயு'க்களால் ஆனது தலைப் பாகம். இதன் குறுக்களவு பத்து லட்சம் மைல் வரை இருக்குமாம்; இந்த மெல்லிய எரிவாயுக்கள், சூரியக் காற்றால் 'ஊதல்' பெற்றுப் பிரகாசம் பெறுகின்றன. இந்த எரி வாயுக்கள் பின்னோக்கி ஊதப்படுகையில், அதன் 'வால் பகுதி' உருவாகிறது.

வால்நட்சத்திரம் சூரியனை நெருங்க நெருங்க அதன் வால் நீண்டு கொண்டே செல்லும். சூரிய வெப்பக் காற்று அதிகரிப்பதே இதற்குக் காரணம். சூரியனை விட்டு விலகி, குளிர்ச்சியான வானப் பரப்பின் ஆழத்தை நோக்கி வால்நட்சத்திரம் செல்கையில், இந்த வாலும் மங்கத் தொடங்குகிறது.

தலைப் பகுதியின் மையப் பகுதி (உட்கரு) மிகப் பெரிய பனிக் கட்டியாலும் துகளாலும் அமைகின்றது. 'ஸ்நோ பால்' போன்ற இந்த மையப் பகுதி மட்டும் அரை மைல் குறுக்களவு வரை இருப்பதுண்டு. இந்த மையப் பகுதி எப்படி உருவாகின்றது என்பது இன்னும் விளங்காத புதிராகவே உள்ளது. சூரிய மண்டலம் எல்லாம் உருவான காலத்தில், விமானப் பரப்பில் எண்ணற்ற பனிக் கட்டிகளும் துகள்களும் சஞ்சரித்தனவென்றும்,—அவையெல்லாம் நாளடைவில் கூடி இறுகி, வால் நட்சத்திரத்தின் தலைப் பகுதியாக மாறுகின்றன என்றும் விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். இம்மாதிரிச் சுழலும் லட்சோப லட்சம் பனிக் கட்டிகளில் ஒரு சில மட்டும், வால்நட்சத்திர வடிவு பெற்று, சூரிய மண்டலத்துள் பிரவேசிக்கின்றன.

சூரியனை நோக்கி இவை வரும்போது, சூரியக் கதிர் வீச்சால், தலைப் பகுதியில் உள்ள பனிக் கட்டி, எரி வாயுவாகச் சூடும் சுடரும் பெறுகின்றது. ட்யூப்லைட்டின் குழாயில் மின்சாரம் பாய்ந்தவுடன் குழாய் முழுவதுமே ஒளி பெறுவது போல, வால் நட்சத்திரத் தலைப் பகுதி முழுவதுமே பிரகாசம் பெற்றுவிடுகிறது. வால், அதன் பின்புறத்தில் ஒளிக்கோடு போலத் தோன்றுகிறது. பத்து கோடி மைல் வரை நீளம் உள்ள 'வால்'கள் உள்ளன. இம்மாதிரி வால் நட்சத்திரங்கள் இதுவரை 800 வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தூமகேது!

வால்நட்சத்திரத்தை — 'தூமகேது' என நம் நாட்டில் அழைக்கிறோம். தூமகேது தோன்றினால் அசம்பாவிதங்கள்



விளையும் என்பது நெடுநாளைய நம்பிக்கை.

தூமகேது தோன்றினல் பூமியில் உள்ளோர்க்குக் கேடு விளையும் என்பதை எல்லா நாடுகளிலும் நம்புகின்றனர். ஜூலியஸ் சீஸர் மரணத்தின் முன் வால் நட்சத்திரம் தோன்றியதாம். ஆங்கில நாட்டில், ஹேஸ்டிங்ஸ் போருக்கு முன் தூமகேது தோன்றியதாம். நம் நாட்டில் காந்திஜியின் அவல மரணத்தின் முன் வால் நட்சத்திரம் வந்தது !

கோஹூ'டெக்கே வருக !

இப்போது தோன்றப் போகும் 'கோஹூ டெக்' மூலம் பல ஆராய்ச்சிகளைக் கண்டறிய உலக விஞ்ஞானிகள் புறப்பட்டு விட்டார்கள். வால்நட்சத்திரம் எப்படி உருவாகிறது என்பதைக் கண்டறிய வானத்தில் பல ஏவு கருவிகளை அனுப்பியுள்ளனர். ஸ்கைலாப் மூன்றில் அமர்ந்துள்ள வானவெளி வீரர்கள் 11 நுண்ணிய கருவிகளையும் காமிராக்களையும் கொண்டு, பூமியின் விளிம்புக்குள் இதுவரை புகாத, 'அல்ட்ரா வைலட்' கதிர்களை ஆராய்வர். கிறிஸ்துமஸ் நாளன்று, ஸ்கைலாப்பின் வெளியே வந்து படமெடுத்து அனுப்புவர். அமெரிக்கா, சுக்கிரனை நோக்கி ஏ. .ள்ள மாரினர் 10 எனும் ஆராய்ச்சிக் கலம் நூற்றுக்கணக்கான படங்களை மிக மிகச் சமீபம் வரை சென்று எடுத்து அனுப்பும். பூமியிலிருந்து சேகரிக்கும் தகவல்களுடன் இவற்றையும் ஒப்பிட்டு, வால்நட்சத்திரங்களைப் பற்றிய புதிய செய்திகளை எல்லாம் சொல்லப் போகிறார்கள்.

நல்ல நாள்

அழகுனர்

முற்றம் எங்கும் தாவியே
முறுவலிக்கும் கன்றுகள்
சுற்றி வந்து துள்ளிடும்
சீர்மி குந்த நல்லநாள்

வீட்டைச் சுற்றி மாவிலை
விளங்கும் வண்ணம் தோரணம்
கூட்டி வைக்க நன்மைகள்
கூடு கின்ற நல்லநாள்

தெற்கே சென்ற கதிரவன்
திக்கை மாற்றி வடக்கிலே
அற்புதங்கள் செய்கிற
அருமை யான நல்லநாள்.

உண்ண உணவு தருகிற
உழவன் பெருமை முழுவதும்
எண்ணி எண்ணிப் பாடிடும்
இனிமை யான நல்லநாள்.

மங்க லங்கள் தங்கிட
மக்கள் ஒன்று கூடியே
பொங்கல் இட்டுப் பாடிடும்
பெருமை மிக்க நல்லநாள்.



★

''கொஞ்சம் இடங்கொடுத்தால் தலைக்குமேலே ஏறுகிறீர்களே!''

-புகைப்படம் : எம். நடராஜன்

★

''மடியில் வைத்தால் பால் டின் னும் மத்தளமாகும்''

''கையிலகப்பட்டால் கால்பந்தும் கடமாகும்''

-புகைப்படங்கள்: கலை நாகராஜன்

★









வெள்ளி

அ. ராம்கோபால்

கருக்காத, துருப் பற்றாத உலோகங்களை, ''பிரபு உலோகங்கள்'' (Noble metals) எனக் கூறுவார்கள். இந்த வகை பிரபு உலோகங்களில் முதன்மை பெற்று நிற்பவை தங்கமும் வெள்ளியுமாகும். பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே தங்கத்தைப் போல் வெள்ளியும் விலை உயர்ந்ததாகவும், சொத்தாகவும் மதிக்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பாக ஆசியா மைனர் (தற்போதைய துருக்கியின் ஒரு பகுதி) பகுதியில் வெள்ளி நாணயம் செலாவணியில் இருந்திருக்கிறது.

பொஹீமியாவில்

இன்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்பு பொஹீமியாவில் (செகோஸ்லவேகியாவின் ஒரு பகுதி) ஜோகிம்ஸ்தால் என்ற இடத்தில் ஏராளமாக வெள்ளி கிடைத்தது. இதனால் அங்கு வெள்ளி நாணயத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டது. இதனால் அங்கு தயாரான வெள்ளி நாணயத்துக்கு ஜோகிம் ஸ்தாலர் (Joachimsthaler) எனப் பெயர் வந்தது. இந்தப் பெயரே டாலர் என வெள்ளி நாணயத்துக்கு மருவி வழங்குகிறது. நாணயம் தயாரிக்க மட்டுமின்றிப் பலவித நகைகள், பாத்திரங்கள் தயாரிக்கவும் வெள்ளி வெகுவாகப் பயன்படுகிறது.

உருகிய நிலையில்

இதை லத்தீன் மொழியில் ''அர்-ஜெண்டம்'' எனக் கூறுவார்கள். ஹிந்தியில் ''சாந்தி'' எனப் பெயர். 960.5 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலையில் இது உருகுகிறது. 2152 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலையில் ஆவியாகிறது. உருகிய நிலையில் தன் அளவைப் போல் இருபது பங்கு பிராணவாயுவைத் தன்னுள் அடக்கிக் கொள்ளுகிறது. ஆனால் பிறகு குளிர்ந்து இறுக ஆரம்பிக்கும்போது இந்தப் பிராணவாயுவை வெளியேற்றிவிடுகிறது. இதனால் இதை ''ஸ்பிட்டிங் சில்வர்'' (Spitting Silver) எனக் கூறுவார்கள்.

கறுக்கிறது

வெள்ளியால் ஆன பொருட்கள் அதிக காலம் காற்றில் திறந்த நிலையில் இருந்தால் ஓரளவு கறுத்துப் போவது உண்டு. காற்றில் உள்ள கந்தகப் பொருட்களின் அணுக்கள் வெள்ளியோடு கலந்து வெள்ளி சல்பைடு (Silver Sulphide) ஆக மாறுவதால்தான் இவ்விதம் நேரிடுகிறது.

பௌதீக குணம்

வெள்ளியை மெல்லிய தகடுகளாகத் தயாரிக்கலாம். இப்படி மெல்லிய தகடுகளாகத் தயாரிக்கக்கப்பட்ட வெள்ளியின் நிறம் இலேசான நீல நிறமாக இருக்கும். உருகிக் கூழ் நிலையில் (Colloidal) இருக்கும் போது பழுப்பு நிறமாகவோ அல்லது ஓரளவு கறுப்பு நிறமாகவோ இருக்கும். மிக மெல்லிய கம்பிகளாகவும் இதைத் தயாரிக்கலாம். 1/1000 அங்குல கனமுள்ள மெல்லிய தகடுகளாகவும் தயாரிக்கலாம். இதன் ஒப்பு அடர்த்தி 10.49. வெப்பத்தையும் மின்சாரத்தையும் நன்கு கடத்தும் இயல்பும் இதற்குண்டு.

வெள்ளி தாதுக்கள்


வெள்ளி தாதுக்கள் சல்பைடு, (Sulphide) குளோரைடு (Chloride)



ஆக இரண்டுவிதமாகக் கூட்டு தாதுக்களாகக் கிடைக்கின்றன. சல்பைடு கூட்டு தாதுக்களில் சில்வர் கிளான்ஸ்— (Silver glance) அர்ஜென்டைட் (Argentite) சில்வர் காப்பர் கிளான்ஸ் (Silver Copper glance) பைராஜிரைட் (Pyragyrite) ரூபி சில்வர் (Ruby Silver) ஆகியவை முக்கியமானவை. குளோரைடு கூட்டு தாதுக்களில் குளோர் ஆர்ஜிரைட் (Chlorargerite) ஹார்ன் சில்வர் (Horn Silver) ஆகியவை முக்கியமானவையாகும். தங்கம், செம்பு, ஈயம் ஆகியவற்றோடு தனி நிலையில் கலந்தும் இது கிடைக்கிறது. இருந்த போதிலும் தனி நிலையில் ஈயத்தோடுதான் அதிகமாகக் கலந்து கிடைக்கிறது. இந்தக் கலப்பில் சாதாரணமாக 0.01லிருந்து 0.05 சதவிகிதம் வரை வெள்ளி இருக்கும். உலகில் மெக்சிகோ நாட்டில்தான் வெள்ளி அதிகமாகக் கிடைக்கிறது. அதற்கடுத்தபடியாகப் பெரு, நார்வே, சிலி, ஜப்பான், ஹங்கேரி, ஆஸ்திரேலியா, பொலீவியா, அமெரிக்கா, கானடா ஆகிய நாடுகளில் கிடைக்கிறது.

பிரித்தெடுக்கும் முறைகள்

வெள்ளியைப் பிரித்தெடுக்க இப்போது அதிகமாக இரண்டே முறைகள் தான் பின்பற்றப்படுகின்றன. குபலேசன் முறை (Cupalation Process) சயனைடு முறை (Cyanide process) ஆகியவையே அவை. முதல் முறையில் குபெல் (Cupel) என்றும் ஒரு தனி வகையான பாத்திரம் 65 சதவிகித சுண்ணாம்பு, 30 சதவிகித



தாய்லாந்து நாட்டில் பிரபலமாக உள்ள வெள்ளிக் கிண்ணமும் வெள்ளிப் பேழைகளும்.

மண், 5 சதவிகித மாக்னீஷியம் கார்பனேட் கலந்து செய்யப்படும். இதில் எலும்புச் சாம்பலும், சிமெண்டும் பரப்பி அதன் மேல் வெள்ளி கலந்த தாதுவை நிரப்புவார்கள். பிறகு அப் பாத்திரத்தை ரிவெர்பரேடரி (Reverberatory) என்னும் ஒரு வகை அடுப்பின் மீது வைத்து மேல் பக்கமிருந்து வெப்பக் காற்றை உள்ளே பாய்ச்சுவார்கள். இதனால் ஈயம் எல்லாம் ஈய ஆக்சைடாக மாறி அக்காற்றோடு கலந்து வெளியேறிவிடும். பிறகு கடைசியில் வெள்ளி மட்டும் எஞ்சி இருக்கும்.

சயனைடு முறையில் முதலில் அர்ஜெண்டைட் கனிஜத்தை இடிப்பார்கள். பிறகு அதை மாவாக அரைப்பார்கள். இப்படி அரைக்கும்போது அதில் சயனைடுகரைசல்(0.07சதவிகிதம்) அடிக்கடி சிறிதுசிறிதாகச் சேர்ப்பா.ர்கள். இதனால் சோடியம் அர்ஜெண்டோ சயனைடு உண்டாகி அதில் வெள்ளி கரைந்துவிடும். மற்ற அசுத்தங்கள் அதில் கரையாது தனித்து நின்றுவிடும். வெள்ளி கரைந்த சோடியம் — அர்ஜெண்டே சயனைடு கரைசலில் ஈயத் தூளைச் சேர்த்தால் வெள்ளி மட்டும் தனியே பிரிந்துவிடும். இந்த வெள்ளி கறுப்பாக இருக்கும். பொட்டாஸயம் நைட்ரேட்டுடன் சேர்த்து அதை உருக்கினால் பளபளப்பான வெண்மை நிற வெள்ளி கிடைக்கும்.

உபயோகம்

வெள்ளி ஒரு மிருதுவான உலோகம். இதனால் சுத்தமான வெள்ளி அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. அதோடு தாமிரம் போன்ற வேறு உலோகங்களைக் கலந்தே பலவிதமாகப் பயன்படுத்துகிறார்கள். நாணயம், பாத்திரங்கள், நகைகள் செய்வதற்குச் சுத்தமானவெள்ளியோடு 6சதவிகிதம்தாமிரம் கலந்து உபயோகிப்பார்கள். பிளாடினம் கலந்த வெள்ளி செயற்கை பற்கள் தயாரிக்க உபயோகமாகிறது. வெள்ளி பஸ்மம் ஆயுர்வேத மருந்தாக ஆதி காலம் தொட்டுப் பயன்பட்டுவருகிறது. போட்டோ தொழிலிலும் எலும்பு முறிவுகளைச் சரிப்படுத்தவும் உயர் ரக வெடி மருந்து தயாரிப்புக்கும் வெள்ளி உப்புக்கள் பயன்படுகின்றன. இரசாயனத் துறையில் பயன்படும் கலன்களின் உள்ளே பூசவும் வெள்ளி பயன்படுகிறது. வெப்பம் மாற்றிகள் (Heat exchangers) தொடர்பு முறிப்பிகள் (Contact breakers) தயாரிக்கவும் வெள்ளி பயன்படுகிறது.


சிரிக்கச் சிரிக்க...
கொர்... கொர்...
அந்தப் பக்கம் அறுப்பவன்: 'கொர், கொர்' என்று அறுக்கிற சப்தம் மாத்திரம் வருகிறது. ஆனால் நிமர்று ரம்பத்தை இழுக்கவே முடியல்லியே!
'ஏண்டா நீ பள்ளிக்கூடம் வரல்லே?'
'உண்மையைச் சொல்லி விடுறேன். டிரஸ் பண்ணிக் கொண்டு கண்ணாடி எதிரே போய் நின்றேன். அதில் என்னைக் காணவில்லை. 'சரி! ஒருசமயம் பள்ளிக்கூடம் போயிட்டேன் போலிருக்கு'ன்னு வீட்டிலேயே இருந்து விட்டேன். பிறகு சாயங்காலம் தான் தெரிந்தது, கண்ணாடி உடைந்து வெறும் சட்டம் மாத்திரம்தான் இருக்குன்னு.
சாமா
???
விற்பவர்: முதுகு வலி மற்றும் வேறு எந்த வலியானாலும் உடனே தீர்க்கும் மருந்து வேணுமா?
மணி: உஷ்! இப்பத்தான் எங்கப்பா பிராகிரஸ் ரிப்போர்ட்டைப் பார்க்கிறார். கொஞ்சம் வெளியேஉட்கார்ந்திண்டிரு.
''டேய்! என்னைப் 'பிளாட்டிங் பேப்பர்'னு எல்லோரிடமும் பரிகாசம் பண்றயாமே, வாஸ்தவமா? ...ம் சிரிப்பை அடக்கிண்டு பதில் சொல்லு.''
''என்ன 'பன்' நன்னா இல்லையா? டேய், நீ பிறக்கறத்துக்கு முன்னுலேயே இருந்து நான் 'பன்' பண்ணினவன்டா?''
''அது சரி, அப்ப பண்ணின பன்னை இப்ப ஏன் விற்கணும்னுதான் நான் கேட்கிறேன்?''

பூதான முனிவரைப் போட்டுப் பாருங்கள்

—தாணு



பேசும் தபால் தலைகள்

அன்றைக்குச் சாயந்திரம் ஆபீசிலிருந்து வந்ததும் அப்பா எல்லோரையும் கூப்பிட்டார். அவர் கையில் ஒரு கவர் இருந்தது. அது பூடானிலிருந்து வந்த கவர். அதைக் காண்பித்து, ''இதோ, இது என்ன சொல்லு பார்க்கலாம்'' என்றார். அந்த உறையின் மீது சின்னஞ் சிறிய இசைத் தட்டுக்கள்போல் இரண்டு இருந்தன. ஆகவே, ''ப்பூ, இது தெரியாதாக்கும், ஏதோ ரிகார்ட்'' என்றேன்.

அவர் சிரித்துக் கொண்டே, ''உம்ஹூம், அதுதான் இல்லே, இதெல்லாம் ஸ்டாம்ப்; தபால் தலைகள். வெறும் ஸ்டாம்பில்லே. பேசுகிற தபால் தலைகளாக்கும்'' என்றார்.

''என்னபேசறஸ்டாம்பா? நம்ப முடியலையே!'' என்று அம்மா அசந்து விட்டார்கள்.



என்னாலும்கூட நம்ப முடியவில்லை. அந்தக்கவரைக் கையில் வாங்கிப் பார்த்தேன். வட்டமாக ரிகார்ட் மாதிரி இருந்தாலும், ஸ்டாம்ப் மாதிரியே, பூட்டான் அரசு முத்திரையும், 10CH, 25CH, 1.25NV 3NV என்ற மதிப்பும் போட்டிருந்தன. அப்பா கவரிலிருந்து ஸ்டாம்பைத்தனியே எடுத்து ரிகார்ட் ப்ளேயரில் போட்டார். 33 rpmல்அவை பூட்டான் நாட்டுச் சரித்திரம், அவர்களின் தேசிய கீதம், எல்லாம் பாடின. ஒவ்வொரு ஸ்டாம்பும் ஒரு நிமிஷம் பத்து விநாடிதான் ஓடின. அப்பா சொன்னார்: ''பூடான் நாட்டிலே, தபால் தலைகளிலே நிறையப் புதுமைகள் பண்ணறாங்க. 67ம் வருஷமே 3.Dன்னு சொல்றோமே, முப்பரிமாணம், அது மாதிரி ஸ்டாம்ப் போட்டாங்க. ஒரு ராக்கெட் கிளம்பற படம் போடறாங்கன்னு வெச்சுக்க. அந்த ராக்கெட் படத்திலே அதோட உயரம், அகலம், ஆழம் எல்லாம் தத்ரூபமா நீ பார்க்கலாம்.''

''ஆமாம், நான் பார்த்திருக்கிறேன். தபால் கார்டு அளவிலே, குழந்தை கண் சிமிட்டற மாதிரியெல்லாம் முன்னாலே வந்ததே!'' என்றாள் அம்மா.

''கிட்டத்தட்ட அந்த மாதிரிதான். ஆனால் சின்னதாய், ஸ்டாம்ப் அளவிலே தான் இருக்கும் இது. இவங்களைப் பார்த்து ஜப்பான் நாட்டிலேகூட இந்த மாதிரி போட்டாங்க.''

'' அப்புறம்?'' என்று கேட்டேன் நான் அடக்கமாட்டாத ஆவலுடன்.

'' இன்னும் கேளு, பூடானிலே பிளாஸ்டிக்கிலேகூட ஸ்டாம்ப் போட்டிருக்காங்க. பிளாஸ்டிக் பேப்பர்லே. தலைவர்கள் உருவங்களை, பதிச்சு — இங்கிலீஷிலே embossing னு சொல்றாங்களே — அந்த முறையில் ஸ்டாம்ப் வந்தது. நீ காந்தித் தாத்தாவைப் படத்திலேதானே பார்த்திருக்கே. இந்த ஸ்டாம்பிலே அவர் முகத்தின் மேடுபள்ளங்களைத் தடவிப் பார்க்கலாம்.''

''பூடான் சின்னஞ் சிறிய நாடானாலும் இந்த மாதிரி பெரியபெரிய அதிசயங்களையெல்லாம் செய்து எல்லோரையும் ஆச்சரியத்திலே மூழ்கடிக்கறாங்க. அது சரி, பூடான் எங்கே இருக்குன்னு தெரியுமில்லையா உனக்கு?'' என்று கேட்டார் அப்பா.

''இது தெரியாதாக்கும் நம் நாட்டின் வடக்கு எல்லையிலே உள்ள நாடு பூடான். அது சரி, எப்படிப்பா இந்த ரிகார்டு ஸ்டாம்புகளைத் தயாரிக்கிறாங்க?'' என்று கேட்டேன்.

''பாலிதீன் ஷீட்டுகளில் ஒலிப்பதிவு செய்து, பின்புறம் பசையுள்ள காகிதத்தை ஒட்டிடறாங்க. அதை உரிச்சுட்டுக் கவரிலே ஒட்டிடணும்.''

'' ஆமாம், ஒரு சந்தேகம். ஸ்டாம்ப்னு சொல்றீங்களே. கிழிக்கிறதுக்குத் துளை துளையாய் இருக்குமே, அதெல்லாம் இதிலே காணுமே?''

'' இது துளையிடப்படாத— Iimperforated வகையைச் சேர்ந்தது''

எனக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. எனது ஸ்டாம்ப் ஆல்பத்துக்கு ஒரு புது வகை கிடைத்துவிட்டதே! நம்ம நாட்டிலும், இந்த மாதிரி வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

படமும் தகவலும்: **ராஜன்**

கேட்டு எழுதியவர்: **நாராயண்**


மூளைக்கு வேலை

☐ சோமுவின் பள்ளிக்கூடம் வெகு தூரத்திலிருந்தது. அவன் நடந்துதான் போவான். கடை வீதியிலுள்ள மணிக் கூண்டுக்குப் போகும் போது மொத்த தூரத்தில் கால் பாகத்தைக் கடந்திருப்பான். அப்போது சரியாக காலை 8—30 மணியாகும். ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் போது மூன்றில் ஒரு பகுதி தூரத்தைக் கடந்திருப்பான். அப்போது ஸ்டேஷன் கடிகாரத்தில் ஒன்பது அடிக்க இருபத்தைந்து நிமிடங்கள் இருக்கும். அப்படியானால் பள்ளிக்கு அவன் எத்தனை மணிக்குப் போய்ச் சேருவான்?



விடை: 8.30க்கு. மொத்த தூரத்தில் கால் பாகத்தையும் 8.35க்கு மொத்த தூரத்தில் மூன்றில் ஒரு பங்கையும் கடக்கிறான். 1/3க்கும் ¼க்கும் உள்ள வித்தியாசம். 1/12: 1/12: தூரத்தை ஐந்து நிமிடங்களில் கடக்கிறான். 8.30 மணிக்கு அவன் கடக்க வேண்டிய தூரம் ¾பாகம் அல்லது 9/12 பாகம். அதாவது ஒன்பது ஐந்து நிமிஷங்கள் (9×5 = 45) தேவைப்படும். ஆக சோமு பள்ளிக்குப் போகும் போது கடிகாரம் 9.15 மணி காட்டும்.

☐ ஒரு பள்ளிக்கூடத்தில் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்தார்கள். மொத்தம் 59 பேர் பிரயாணம் செய்வதாக இருந்தது. சுற்றுலாக்களுக்கு வான் வழங்கும் ஒரு நிறுவனத்துடன் தொடர்புகொண்டார் தலைமையாசிரியர். அவர்கள் கூறினார்கள்; ஒன்பது பேர் உட்காரக்கூடிய வான்களும் நான்கு பேர் மட்டுமே



அமரக்கூடிய கார்களும் இருப்பதாகச் சொல்லிச் சில வான்களையும் சில கார்களையும் அனுப்பிக் கொடுத்தார்கள். மொத்தப் பேருக்கும் இடம் கிடைத்தது. எந்த இடமும் காலியாக இருக்கவில்லை. அப்படியானால் அந்த நிறுவனம் எத்தனை வான்களையும் எத்தனை கார்களையும் அனுப்பியது ?

விடை: ஒரு வான் மட்டும் வருவதாகக் கொள்வோம். அதில் ஒன்பது பேர் அமரலாம். மீதி ஐம்பது பேர். நான்கு பேர் அமரக்கூடிய கார்களில் மீதமில்லாமல் ஐம்பது பேரை அடக்க முடியாது. இரண்டு வான்கள் வருவதாகக் கொண்டால் 18 பேர் போக மீதி 41 பேர். இப்போதும் கார்களில் மீதமின்றி இவர்களை அமர்த்த இயலாது. மூன்று வேன்களில்? 9×3=27 பேர். மீதி 32 பேர். இவர்கள் எட்டு கார்களில் அடங்கி விடுவார்களே! ஆக மூன்று வேன்களும் எட்டுக் கார்களும் அனுப்பப்பட்டன.


☐ ஒரு பால்க்காரர். அவரிடம் 25 பசுக்கள் இருந்தன. அவருக்கு ஐந்து பிள்ளைகள். பசுக்களைப் பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுத்துவிட விரும்பினர். ஆளுக்கு ஐந்து பசுக்கள் என்று இலகுவாகப் பிரித்துக் கொடுக்க முடியவில்லை. ஏனெனில், முதலாவது பசு ஒரு லிட்டர் பால் கொடுத்தது. இரண்டாவது பசு இரண்டு லிட்டர் பால் கொடுத்தது. இருபத்தைந்தாவது பசு இருபத்தைந்து லிட்டர் பால் கொடுத்தது. எனவே கறக்கும் பாலுக்கு ஏற்ப எண்களைப் பசுக்களுக்குப் பெயராகச் சூட்டிவிட்டான். பிரித்துக் கொடுக்கும்பொழுது பிள்ளைக்குப் பிள்ளை பாகுபாடு பார்க்கலாமா? 1, 2, 3, 4, 5, என்று ஒரு பையனுக்குப் பசுக்களைக் கொடுத்தால், அவை மொத்தம் கறப்பது பதினைந்து லிட்டர். 21, 22, 23, 24, 25 வது பசுக்களைக் கொடுத்தால் அவை கறப்பது 115 லிட்டர். இப்படி வரிசையாகப் பசுக்களைப் பிரித்துக் கொடுத்தால், ஒருவனுக்குக் குறைவாகப் பால் கிடைக்கும். இன்னொருவனுக்கு அதிகமாகக் கிடைக்கும் இல்லையா? ஒவ்வொருவருக்கும் பசுக்களும் சமமாகக் கிடைக்க வேண்டும், பாலும் சமமாகக் கிடைக்க வேண்டும் என்று விரும்பினன். உங்களால் அவனுக்கு உதவ முடியுமா, பாருங்களேன் !

விடை: முதற் பையனுக்குக் கிடைத்த பசுக்கள் 1, 10, 14, 18, 22. இரண்டாம் பையனுக்குக் கிடைத்தவை 2, 6, 15, 19, 23 ; மூன்றும் பையனுக்குக் கிடைத்தவை: 3, 7, 11, 20, 24: நான்காம் பையனுக்குக் கிடைத்தவை; 4, 8, 12, 16, 25 ; ஐந்தாம் பையனுக்குக் கிடைத்தவை : 5, 9, 13, 17, 21 ஆக ஒவ்வொரு பையனுக்கும் 65 லிட்டர் பாலும் ஐந்து பசுக்களும்!

காகித வித்தை!

ஒரே அளவுள்ள (சுமார் 6 அங்குலம்) 12 சதுரமான வெள்ளை அல்லது வர்ணக் காகிதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். பின்பு அந்தக் காகிதங்களைக் குறுக்காக ஒரு பாகத்தின் மேல் அதன் அடுத்த பாகம் இருக்குமாறு நடுவே மடித்துக் கொள்ளுங்கள். அவ்வாறு மடித்த காகிதங்களுள் ஒன்றை எடுத்து 'ஏ' என்று எழுதியுள்ள படத்தில் காட்டியதைப் போல் புள்ளியிட்டபடி வெட்டிக் கொள்ளுங்கள். பின்பு மடித்துள்ள காகிதத்தை விரியுங்கள். 'பி' என்று எழுதியுள்ள படத்தில் உள்ளதைப் போல் இருக்கிறதா? இப்படியே காகிதங்களை மடித்து அடுத்துக் காட்டியுள்ள அமைப்புக்களையும் கத்தரியுங்கள். பிறகு நான்காக மடித்து உங்கள் மனோபாவத்தில் தோன்றும் அமைப்புக்களை வெட்டிப் பிறகு காகிதத்தைப் பிரியுங்கள். விதம் விதமான, விநோதமான கோலங்கள் — ஒன்றே போலக் கிடைக்கும். கைவேலைக்குக் கைவேலை, பொழுதும் நல்லபடியாகப் போகும்.

— அன்புநாதன்



ஆண்டாளே, நீ காப்பாற்றினாய்!

சடையன் வீட்டுத் தோட்டத்தில் விளாம்பழம் நிறையக் காய்த்துக் கிடந்தது. 'ஒரு மூட்டை விளாம்பழம் பறித்து அரண்மனைக்குக் கொண்டுபோய் ராஜாவிடம் கொடுத்தால் என்ன?' இவ்வாறு சடையன் எண்ணினான்.

அவன் மனைவி "விளாம்பழம் பழ வகையைச் சேர்ந்ததுதான். இருந்தாலும் ஒரு மூட்டை விளாம்பழத்தை விட நமது கொல்லையில் கொடிமுந்திரி நாலு குலை பழுத்துள்ளது. அதனைப் பறித்து ஒரு கூடையில் வைத்துக் கொண்டு போய்க் கொடுங்கள்" என்றாள்.

சடையன் நாலு திராட்சைக் குலைகளைப் பறித்துக் கூடைக்குள் போட்டான். ராஜாவின் அரண்மனைக்கு வந்தான்.

இரவு நேரம். ராஜா உணவு உண்ட பின்பு நிலா முற்றத்தில் தமாஷாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். சடையன் என்னும் குடியானவன் பழக் கூடையுடன் வந்த விவரத்தைச் சேவகன் போய்ச் சொன்னான்.

"அவனை உள்ளே அழைத்து வா" என்றான் மன்னன்.

சடையன் கூடையுடன் வந்தான். அரசர் நிலா முற்றத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்தபடி ஆடிக் கொண்டிருந்தார். அவருக்குப் பசி இல்லை. குஷியான நேரம்.

தமக்கு எதிரே கிடக்கும் நாற்காலியில் சடையனை உட்காரும்படி சொன்னார். சடையன் மரியாதையுடன் உட்கார்ந்திருந்தான்.

ராஜாவுக்குக் குஷி. ஒவ்வொரு பழமாகக் கொய்து விளையாட்டாக, சடையன் தலையைக் குறி பார்த்து அடித்துக் கொண்டிருந்தார். அரசருக்கு இது விளையாட்டு. ஒவ்வொரு பழம் தலையில் விழுந்ததும், "ஆண்டாளே நீ காப்பாற்றினாய்!", "ஆண்டாளே! நீ காப்பாற்றினாய்!" என்று சடையன் சொல்லிக் கொண்டிருந்தான். நாலு திராட்சைக் குலையில் உள்ள பழங்களையும் ராஜா தமாஷாகக் குறிபார்த்து எறிந்து குதூகலப்பட்டார்.

ஏறத்தாழ நானூறு தடவை "ஆண்டாளே! நீ காப்பாற்றினாய்" என்று சடையனும் சொல்லி முடித்தான்.

பொறுமையிழந்த ராஜா "சடையா! என்னருமை நண்பா! ஒவ்வொரு பழத்தையும் நான் குறி தவறாமல் எறிகிறேன். உன் தலையில் படுகிறது. நீ ஏன் 'ஆண்டாளே நீ காப்பாற்றினாய்' என்று சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.


"மகாராஜா! என் தோட்டத்தில், விளாம்பழம் நிறையக் காய்த்துக் கிடந்தது. அதில் ஒரு மூட்டை பறித்து அரண்மனைக்குக் கொண்டு வரலாம் என்று எண்ணினேன். என் மனைவியிடம் இதைச் சொன்னேன். அவள் என்னைத் தடுத்தாள். 'நாலு திராட்சைக் குலைகளைக் கொண்டு போங்கள்' என்று புத்தி சொன்னாள். நான் நினைத்தபடி ஒரு மூட்டை விளாம்பழம் கொண்டு வந்திருந்தால் என் தலையின் கதி என்ன ஆகியிருக்கும்?" என்று சடையன் நிறுத்தினான்.

"உன் மனைவியின் பெயர் என்ன?" என்று கேட்டார் ராஜா.

"அவள் பெயர் ஆண்டாள். என்னையும் அவள் ஆண்டாள். என் அறிவையும் அவளே ஆண்டாள்!" என்று பெருமிதத்தோடு கூறினான்.

ராஜாவுக்குச் சிரிப்பு வந்தது. ஒரு கை நிறைய நல்முத்துக்களை அள்ளிக் கொடுத்து, "இதை உன் மனைவிக்கு முத்து மாலை கட்டிப் போடு!" என்று சன்மானம் கொடுத்து அனுப்பி வைத்தார் ராஜா.

—அருந்ததி



தெரியுமா?

956. டான்யூப் நதி சங்கமமாவது கருங் கடலில், செங்கடலில், காஸ்பியன் கடலில், பால்டிக் கடலில் எது சரி ?

957. க்வாட்ரிலி (Quddrille) என்பது ஒரு குரங்கு, நாட்டியம், ஒத்துப் போகாமை, நான்கு பக்கமுடைய உருவம் — இவற்றில் எது சரி ?

958. கீழ்க்கண்ட நகரங்களுள் ஒன்று மட்டும் ஆப்பிரிக்காவில் இல்லை. அது எது ? ஸான்ஸிபார் — கானு — டிரினி டாட் — சூடான்.

959. கானவிரல் முனை (Canaveral) எங்குள்ளது? ஆஸ்திரேலியாவிலா. ரஷ்யாவிலா, பிரான்ஸிலா, அமெரிக்காவிலா?

960. நார்வே, கௌதமாலா, ஸ்விட்ஸர்லாந்து, பாகிஸ்தான் — இவைகளில் எதற்குக் கடற்கரை பாக்கியம் கிடையாது ?

961. நம் உடலில் அச்சில்ஸ் டென்டன் (Achilles Tendon) என்ற உறுப்பு எங்குள்ளது — கண்ணில், கைகளில், கழுத்தில், கணுக்காலில்.

962. பாரீஸ் நகரம் எந்த நதிக் கரையில் உள்ளது ?

963. ஹாகிஸ் (Haggis) என்பது ஒரு பறவை, பேரம் பேசுதல், பாதி மாமிசமும் பாதி ஓட் தானியமும் கலந்து தயாரிக்கப்படும் ஒரு ஸ்காட்லாந்து உணவு, ஸ்காட்லாந்தின் மலைப் பிராந்தியத்தில் காணப்படும் ஒரு சிறிய பிராணி — இவற்றில் எது சரி ?

964. இத்தாலி நாட்டில் ஒரு புகழ் பெற்ற பாலடைக் கட்டி தயாரிக்கப்படுகிறது. அதன் பெயர் என்ன?

965. ஒரு மைலுக்கு எத்தனை கெஜங்கள் ?

966. கிறிஸ்துவ ஞானிகளில் ஒருவர் பிராணிகளை மிகவும் நேசித்தார். அவர் பெயர்—ஸெயிண்ட் லியூக்—ஸெயிண்ட் பிரான்ஸிஸ் — ஸெயிண்ட் ஆந்தனி, ஸெயிண்ட் கிறிஸ்தபர்-இவர்களில் யார்?

967. அன்னாசிப் பழம் விளைவது பூமிக்கு அடியில், பூமிக்கு மேலே, மரங்களில், புதர்களில் — இதில் எது சரி ?

968. இத்தாலி நாட்டு நாணயத்துக்கு என்ன பெயர்?

969. நத்தையின் வேகம் எவ்வளவு என்று கூற முடியுமா?

970. 'கேப்டன் குக்' ஒரு மன்னருக்கு ஓர் ஆமையைப் பரிசாகக் கொடுத்தார். அது எந்த நாட்டு மன்னர் தெரியுமா?

971. Y (ஒய்) என்ற இடம் எந்த நாட்டில் உள்ளது?

972. தென் துருவத்துக்கு முதன் முதலில் சென்றவர் யார்?

973. முதன் முதலில் எடுத்த புகைப் படம் யாரால் எடுக்கப்பட்டது? அதைப் பிரதி எடுக்க எத்தனை நேரம் ஒளியில் வைக்க வேண்டியிருந்தது?

974. உலகின் மிக உயரமான நீரூற்று எங்குள்ளது?

975. மூன்றுக்கு மேல் ஓர் இன மக்களுக்கு எண்ணத் தெரியாது. அது யார்?

976. உலகிலேயே மிகப் பெரிய லஸ்தர் விளக்குகள் (Chandelliers) எங்குள்ளது?

977. ஒரு தனிப்பட்ட அணுவை உங்களால் காண முடியுமா?

978. உலகிலேயே மிகப் பெரிய ஒரு தனி உணவு (உண்ணும் பொருள்)வகை எது, எங்கு புழக்கத்தில் உள்ளது?

979. உலகின் மிகப் பெரிய தேசம் எது?

தெரியுமே!

956. கருங்கடலில். 957. நாட்டியம். 958. டிரினிடாட். 959. அமெரிக்காவில். 960. ஸ்விட்ஸர்லாந்துக்கு. 961. கணுக்காலில். 962. ஸீன் நதிக் கரையில். 963. ஸ்காட்லாந்து உணவு வகை. 964. கோர்கன் ஸோலா பாலடைக் கட்டி (Gorgonzola cheese) 965. 1760 கெஜங்கள். 966. ஸெயிண்ட் பிரான்ஸிஸ். 967. பூமிக்கு மேலே. 968. லயர். 969. பல்வேறு நத்தைகள் உள்ளன. ஆகவே அவற்றின் வேகம் மணிக்கு 23 அங்குலத்திலிருந்து 55 கெஜங்கள்வரை மாறுபட்டிருக்கும். 970. டோங்கா என்ற தீவின் மன்னருக்கு. அந்த ஆமை இன்னும் உயிரோடிருக்கிறது. 971. பிரான்ஸில் உள்ள ஒரு கிராமத்தின் பெயர் இது. 972. நார்வீஜியரான அமுட்ஸன் என்பவர் 1911ல். 973. பிரான்ஸைச் சேர்ந்த விஞ்ஞானியான ஜோஸப் நிஸபோர் நீப்ஸ் (Joseph Nicephore Niepce) என்பவரால் 1826ல் முதல் புகைப்படம் எடுக்கப்பட்டது. 8 மணி நேரம் எக்ஸ்போஸ் செய்யவேண்டியிருந்தது. 974. ஸ்விட்ஜர்லாந்தில் உள்ள ஜெனிவாவில். 426. அடிகள் உயரத்துக்கு இதன் நீர் பீச்சப்படுகிறது. 975. அமேஸான் பகுதியில் வாழும் யாங்கோஸ் வகுப்பாருக்கு. 976. மாஸ்கோ சர்வகலாசாலையில் உள்ள மத்திய விரிவுரை மண்டபத்தில். இங்குள்ள 8 லஸ்தர் விளக்குகள் ஒவ்வொன்றும் ஆறு அடுக்குகளையும் இரண்டரை டன் எடையையும் கொண்டது. 977. முடியும். எலெக்ட்ரானிக் மைக்ராஸ்கோப் மூலம். இது பொருள்களை 2 மிலியன் தடவை பெரிதுபடுத்தக் கூடியது. 978. பெதுாயின் (Bedouin) இனத்தவரின் திருமண விருந்தில் பரிமாறப்படும் ஒருவகை உணவு. முட்டைகளைச் சமைத்து மீனுக்குள் திணிப்பார்கள். அதைச் சமைத்துப் பக்குவப்படுத்தப் பட்ட கோழிக்குள் திணிப்பார்கள். இதை வறுக்கப் பட்ட ஆட்டுக்குள் திணிப்பார்கள். இந்த ஆட்டை ஓர் ஒட்டகத்தின் உடலுக்குள் திணித்துப் பக்குவப்படுத்துவார்கள். இது ஒரே உணவாக எல்லோராலும் பகிர்ந்து உண்ணப்படும். 979. ரஷ்யா. இதன் பரப்பளவு 8,650,000 சதுர மைல்கள்.

‘கோகுல’த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு ‘கல்கி’ அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்

பல விஷயங்கள் குழந்தைகளுக்கு கற்பிக்கப்படவேண்டும்



சில விஷயங்களை அவர்கள் தாங்களாகவே கண்டுபிடித்துவிடுவார்கள்

மிட்டாய்களில் சிறந்தது எது என்பது,
அதில் ஒன்று, குழந்தைகளின்
இரத்தத்தில் ஊறிய உணர்வு அது.
பம்பரங்கள், கோலிகள், கற்கண்டு
இவைகள் பற்றி யார் கற்றுத் தருகிறார்கள்?
ஆகவே குழந்தைகள் "நியூட்ரின் மிட்டாய்கள்"
தின்னத் தின்ன திகட்டாதவை என்று
சொன்னால் அதற்கு ஒரு முக்கிய காரணம்
உண்டு என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்.
பல ரகங்கள் கொண்ட சாபி டாபிகள்,
கோகோனட் பான் பான்கள், ஆரஞ்சு
காண்டிகள், லாக்டோ பான் பான்கள்-பால்,
மால்ட், தேன் சர்க்கரை சத்து மிகுந்தவை,
இவைகளிலிருந்து குழந்தைகள் தப்பமுடியாது.

nutrine

நியூட்ரின்

தின்னத் தின்ன திகட்டாத மிட்டாய்

நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
பலமனேர் ரோடு, சித்தூர், (ஆ.பி.)

MCM-4/73 TAM